மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 3 | 15 - 8 - 54 | இதழ் 8



சூயஸ் கால்வாய்

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

ஆங்கில வகுப்பில் அண்ணா!

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது ஆங்கிலத்தில கட்டுரையெழுதுவதிலும், பேசுவதிலும் சிறந்து விளங்கினார்கள். அவர் கல்லூரி முதல் வகுப்பில் படிக்கும் பொழுதே, அவருடைய ஆங்கிலக் கட்டுரைகளை எடுத்து, ஆசிரியர்கள் மற்ற மாணவர்களுக்கு வகுப்பில் படித்துக் காட்டுவார்களாம்.

ஆனால் அவர் இரண்டாவது வகுப்பில் படித்தபொழுது, ஆங்கிலக் கட்டுரை வகுப்பிற்கு வந்த ஆசிரியருக்கு அண்ணா எழுதுகிற உயர்தர ஆங்கில நடை அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

" அண்ணாதுரை! உன்னுடைய கட்டுரையில் நீண்ட வாக்கியங்கள் பல வருகின்றன. கட்டுரை யென்றால், சிறு சிறு வாக்கியங்களாக இருக்கவேண்டும்." என்று ஆசிரியர் சொன்னார்.

" சரி! கவனத்தில் வைத்துக்கொள்ளுகிறேன் " என்று அண்ணா அந்த வகுப்பில் உட்கார்ந்துவிட்டார்.

அடுத்த ஆங்கிலக் கட்டுரை வகுப்பில், அண்ணா கட்டுரையெழுதி முடித்ததும், ஆசிரியர் அதை வாங்கிப் படித்தார்.

" ஒரு காலத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவன் பெயர் ராபர்ட்...."

இப்படிக் கட்டுரை ஆரம்பித்தது. தான் சொன்னதைப் பையன் அப்படியே கடைப்பிடித்தது அவருக்குச் சற்று மகிழ்ச்சியைத் தந்தது. மேற்கொண்டு கட்டுரையைப் படித்தார்.

" அவன் காலையில் எழுந்தான். வெளியில் வந்தான். சந்தையை நோக்கி, நடந்தான். சந்தைக்கு வந்தான். அங்கு ஒரு கடையிருந்தது.

இப்படி வாக்கியங்களெல்லாம் எழுவாய் பயனிலை இவைகளை மட்டும் கொண்டதாய், மிகச் சிறு சிறு வாக்கியங்களாக இருந்தன. வகுப்பில் இருந்த மற்ற மாணவர்கள் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கேலியைப் புரிந்துகொண்டதும், ஆசிரியர் கட்டுரையை வைத்துவிட்டு, " இப்படி கட்டுரைமுழுவதும் சிறு சிறு வாக்கியங்களாகப் போட்டுவிட்டாயே, ஏன்?" என்று அண்ணாவைக் கேட்டார்.

" நீங்கள்தானே, நீண்ட வாக்கியங்கள் கூடாது; சிறுசிறு வாக்கியங்களாக இருக்கவேண்டுமென்று சொன்னீர்கள் " என்று அண்ணா பதிலளித்தார்.

" அதற்கு ஒரேயடியாக வெறும் சிறு வாக்கியங்களாகவேக் கட்டுரை முழுவதும் இருக்கவேண்டாம். ஆங்காங்கு சில நீண்ட வாக்கியங்களும் வரலாம்!" என்று ஆசிரியர் சொன்னார். அதிலிருந்து அண்ணாவின் கட்டுரையை அவர் குறைகூறுவதி கிடையாது!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 8 - 54 ஞாயிற்றுக்கிழமை

வாழ்க நாஞ்சில் வீரர்கள்!

திருவிதாங்கூர்—கொச்சி அரசின்கீழ் உள்ள தமிழ்ப் பகுதிகளைத், தாய்த்தமிழகத்தோடு இணைக்கவேண்டும் என்ற உரிமைவேட்கையின் அடிப்படையாகப் பிறந்த ஆவலை, அப்பகுதிகளில் வாழும் தமிழ்மக்கள், பலகாலமாக அறவழியில் நின்று, அமைதியான முறையில் வெளிப்படுத்திவந்தனர்.

திருவிதாங்கூர்—கொச்சி அரசு, மலையாள மொழிபேசும் கேரளத்தாரின் அரசாக அமைந்திருத்தலால், தமிழ்ப்பகுதிகளில் வாழும் தமிழர்கள், தாங்கள் தமிழர்கள் என்ற முறையில் பெறவேண்டிய அடிப்படை உரிமைகளைப் பெற முடியாமல் போகிறது; அந்த உரிமைகளைப் பெறத், தாம் வாழும் பகுதி தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இந்த உரிமை வேட்கை தவறானது என்று, எந்த நாகரிகமான அரசியல்வாதிதான் கூறிவிடமுடியும்? அப்படிக் கூறுபவர்களும் இருக்கிறார்கள் என்றால், அவர்களை அரசியல் குருடர்கள், அரசியல் எத்தர்கள் என்றுதானே கூறவேண்டிவரும்!

இந்த உரிமைவேட்கை, நீதியின்பாற்பட்டதாகும் என்று ஏற்றுக்கொண்டதோடு அதனை நிறைவேற்றிவைக்க, எல்லா நியாயமான வழிகளிலும் பாடுபடத், தான் என்றும் தயங்கமாட்டேன் என்ற முறையில், திராவிட முன்னேற்றக்கழகம், அவ்வப்போது அறிக்கைகள்மூலமாகவும், தீர்மானங்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்தி வந்திருக்கின்றது. கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், "திராவிடநாடு திராவிடர்க்கேதான்; நாஞ்சில் தமிழ்ப்பகுதியும், சித்தூர்த் தமிழ்ப்பகுதியும் தமிழர்க்கேதான்" என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லிவந்துள்ளார்கள்.

நாஞ்சில்—தமிழக இணைப்பு முயற்சியை வெற்றிகரமாக்க, அதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் இயங்கிவருகின்றது. திரு-கொச்சி தமிழ்ப் பகுதியிலுள்ள மக்களின் உள்ளத்திலே கொழுந்துவிட்டு எரியும் உரிமை வேட்கையை, அறக் கிளர்ச்சியின் மூலம், இந்தியப் பேரரசினர்க்கும், திரு-கொச்சி அரசினர்க்கும் உணர்த்தவேண்டிய இன்றியமையாமை தி. த. நா. காங்கிரசுக்கு அண்மையில் ஏற்பட்டது. தேவிகுளத்தில், திரு-கொச்சி அரசினர் தமிழ்த் தலைவர்களுக்கு இட்ட தடை யுத்தரவுகளை மீறுவதன் மூலம், உரிமை வேட்கைக்குரலை எழுப்பிக்காட்டவேண்டி ஏற்பட்டது. அறப் போர்ப் படைகள் பல அணிவகுக்கப்பட்டன; படைத்தலைவர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். 'கிளம்பிற்றுக்காண் தமிழர் சிங்கக் கூட்டம் அது கிழித்தெறிய தேடுதுகாண் பகைக்கூட்டத்தை' என்ற முறையில் தொண்டர்கள் திரண்டெழுந்தனர்; திரண்டெழுந்து கொண்டேயிருக்கின்றனர். இதுகாறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அறப்போர் வீரர்கள் சிறைக்கோட்டம் புகுந்துள்ளனர், தங்கள் ஆருயிரை ஈந்திட முனைந்துள்ளனர் என்ற செய்தி, மத்திய அரசாங்கத்தை உணரவைத்திருக்கவேண்டும்; உணரும் நிலையில் மத்திய அரசாங்கம் தன்னைத் தெளிவுபடுத்திக்கொண்டு வாழுகிறதா என்பது இன்னமும் ஐயப்பாடகவே இருக்கிறது! இன்னும் எத்துணைவித அறக்கிளர்ச்சிகளையும், மறக்கிளர்ச்சிகளையும், அது எதிர்பார்த்திருக்கிறதோ தெரியவில்லை! இப்பொழுது நாஞ்சில் பகுதியில் நடைபெற்று வரும் அறக்கிளர்ச்சியின் நோக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு விருப்போடு ஆதரித்திருக்கிறது. அதற்கான முறையில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கையும், எழுத்தும், பேச்சும் வெளிவந்திருக்கின்றன.

இணைப்பு முயற்சியின் காரணமாகத் தமிழர்-மலையாளிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிணக்கைச் சமரசமாகத் தீர்த்துவைக்கும் பொறுப்பும், தகுதியும், உரிமையும் உடையவர்கள் மத்திய அரசாங்கத்தாராகையால், நாம் போராடவேண்டியது நேரு அரசாங்கத்திடம் தான் என்றும், திரு-கொச்சி முதலமைச்சர்

தாணுப்பிள்ளையிடமோ, ஆந்திரா முதலமைச்சர் பிரகாசத்திடமோ மட்டும் சண்டையிட்டால் பயனில்லை என்றும் தி. மு. க. பொதுச் செயலாளர் தெளிவுபட விளக்கிக்காட்டியுள்ளார்கள். மத்திய அரசாங்கத்தை இணங்க வைக்கவேண்டியது இணைப்புக் கிளர்ச்சிகளின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என்பதே தி. மு. கழகத்தின் குறிக்கோளாகும். அதனால் தான், தி. த. நா. காங்கிரஸ் தலைவர் தோழர் நேசமணி விடுதலையடைந்து வெளிவந்ததும், அவரோடு கலந்து, தி. மு. கழகமும் இணைந்து நின்று போராடுவதற்கான நேரடித் திட்டங்களை வகுக்கத் தாம் எண்ணியிருப்பதாகக் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது தோழர் நேசமணி வெளிவந்துள்ளார்கள். அதற்கான சூழ்நிலை இனி உருவாகக்கூடும். அதுபோலவே சித்தூர்த் தமிழ்ப்பகுதியின் சூழ்நிலையை உருவாக்கவும், அறப்போராட்டத்திற்கான திட்டம் வகுக்கவும் அண்ணா அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

தி. த. நா. காங்கிரஸின் தற்போதைய அறப்போராட்டத்தின் நோக்கத்திற்கு ஆதரவுகாட்டும் முகத்தானும், திரு-கொச்சி அரசினரை உணரவைக்கும் முகத்தானும், மத்தியப் பேரரசினரை இணங்கவைக்கும் முகத்தானும் அடையாள மறியல் ஒன்றினை நாகர்கோயில், செங்கோட்டை நீதிமன்றங்களின் முன்னால் ஒரு நாள் நடத்திக்காட்ட திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பிற்று; அவ்வாறே 6-8-54-ம் நாளன்று வெற்றிகரமாக மறியலை நடத்திற்று; 110 தி. மு. கழக அறப்போராட்ட வீரர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்; அவர்களில் சிலர் ஒரு திங்கள், இரண்டு திங்கள்கள், மூன்று திங்கள்கள் என்று பல்வேறுவிதமாகத் தண்டனை ஏற்றுச் சிறைக்கோட்டம் நண்ணியுள்ளனர்; மற்றும் பலரின் வழக்கு ஆராயப்பட்டுத், தண்டனை கொடுக்கப்பட்டு வருகின்றது. தி. மு கழகத்தின் ஈடுபாடு அறப்போராட்டத்தில் புதியதொரு கட்டத்தை உருவாக்கியிருக்கிறது; எதிர்காலத்தின் சீரிய நடப்புகளுக்கு இது சிறந்த அடிப்படையாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று, அடையாள மறியலை வெற்றிகரமாக நடத்தி, ஒருநாள் வீர வரலாற்றைச் செயலால் எழுதிக்காட்டிய நாஞ்சில் தி. மு. க. அறப்போர் வீரர்களின் சீரிய பணி, எதிர்கால அறப்போராட்டத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகும். 'வாழ்க நாஞ்சில் வீரர்கள்' என்று வாழ்த்துகிறோம்! பெருமுயற்சி எடுத்து, அடையாள மறியலை வெற்றிகரமாக்கிய நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் வி. எம். ஜான் அவர்களைப் பாராட்டுகிறோம்! போற்றுகிறோம்!

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

ஆகஸ்ட் 21, 22 சனி ஞாயிறுகளில்

காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானப் பந்தலில் நடைபெறும்

சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் என். எஸ். கிருஷ்ணன்	தலைவர் இரா. சு. தங்கப்பழம்
துவக்குபவர்	துவக்குபவர்
எம். ஜி. ராமச்சந்திரன்	திருச்சி எம். எஸ் மணி

அறிஞர் அண்ணா, கழகப் பேச்சாளர்கள் கலந்துகொள்வர். நாடகங்களும் உண்டு.

சி. வி. எம். அண்ணாமலை
வரவேற்புக்குழுத் தலைவர்.

கருத்துக் கதிர்

பொருள் சரி; இடம் சரியல்ல!

"உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று சமூகத்தைப் பிரிப்பது தாழ்ந்த சாதியினர்க்கு அநீதி இழைப்பதுடன் மட்டுமின்றி, சமூகத்தையே நலிவடையச் செய்கிறது. இதனால் எல்லா சாதி வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் வேரறுக்கவேண்டும்" என்று இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு ஆஜ்மீரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டைத் துவக்கி வைக்கும்போது குறிப்பிட்டுள்ளார். பண்டிதரின் இந்தக் கூற்று படிக்கப்படிக்க, கேட்கக் கேட்க, சுவைக்கச் சுவைக்க இனிக்கவே செய்கிறது. மாநாட்டில் கூடியிருந்த தாழ்த்தப்பட்டோர் அனைவர் உள்ளத்தையும் அது குளிரச்செய்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், செயலுக்கு எந்த அளவுக்கு அந்தக் கூற்று பயன்பட்டுவரும் என்பதுதான் தெரியவில்லை!

தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் போய் இவ்வளவு காரசாரமாகப் பேசியிருக்கிறாரே என்று எண்ணும்போது சிரிப்புகூட வருகிறது! யாரிடத்திலோ சொல்லவேண்டிய செய்தியை யாரிடத்திலோ போய்ச் சொல்லுகிறாரே என்று நினைக்கும்போது, சிரிப்பு வராமல் என்ன செய்யும்? சமூகத்தில் உயர்ந்தசாதி தாழ்ந்த சாதி என்று பிரித்ததும், தாழ்ந்த சாதியினர்க்கு அநீதி இழைத்ததும், சமூகத்தை நலிவடையச் செய்ததும், சாதி வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் உண்டாக்கியதும் தாழ்த்தப்பட்டோரால் ஏற்படுத்தப்பட்டவை யல்லவே! அவற்றை ஏற்படுத்திய உயர்ந்த வகுப்பாரின் வழிவழிவந்தவர்களும், அவற்றைக் கட்டிக் காத்து வருபவர்களும் வேறு எங்கு எங்கேயோ வல்லவா இருக்கிறார்கள்! அத்தகையோரிடத்தில் போய்ச் சொல்லவேண்டிய கருத்துக்களைத் தாழ்த்தப்பட்டோரிடத்தில் சொல்லுவதன் மூலம் ஏற்படும் உருவான பலன் என்ன? தாழ்த்தப்பட்டவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்கள்; கொடுமையை ஆள்பவர்கள் வேறு ஒரு பக்கத்தில் ஒய்யாரமாக வீற்றிருக்கிறார்கள்; 'கொடுமைகளைதல்' பற்றிய உபதேசத்தைப் பண்டித நேரு யாரிடத்தில் செய்யவேண்டும்? கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவரிடத்திலா? இது சிறுவர் வாயிலும் சிரிப்பை விளைவிக்குமே! வர்ணாச்சிரமிகள் வாழும் இடத்திலும், சனாதனி ள் கூடும் இடத்திலும், கோயில் குருக்களிடததிலும், கும்பமேளா கிறுக்கரிடத்திலும், புரோகிதரிடத்திலும், பிராமணோத்தமரிடத்திலும் அந்தக் கூற்றைக் கூறி "சாதி வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் வேரறுக்க வேண்டும்" என்று வற்புறுத்தியிருப்பாரேயானால், அதில் வீரமும் விவேகமும் கலந்திருப்பதோடு, அது உருவான பலனை ஏற்படுத்தவுங்கூடும் என்று நாம் கருதிக் கொள்ளலாம்.

"ஆஸ்பத்திரியையே கண்ணால் கண்டிராதவர்களாயும், ஆடுமாடுகள்கூட குடிக்கக் கூடாதென தடுக்கப்பட்டுள்ள நீரைக் குடிக்கும்படி வற்புறுத்தப்படுகின்றவர்களாயும் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள், மிஷனரிகளைக் கண்டு அவர்கள்பால் ஈர்க்கப்படுகின்றார்கள் என்றால் அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை" என்று மேல்சாதி இந்துக்களின் கொடுமையைப்பற்றி அவரே மாநாட்டில் கூறியுள்ளார். கொடுமை புரிவோர் இல்லாமற் போனால் கொடுமைக்குள்ளாக்கப்படுவோர் தாமே இல்லாமற்போய் விடுவார்கள். எனவே "சாதி வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் வேரறுக்க வேண்டுமா"யின் உயர்ந்த வகுப்பினரின் கொடுமையுள்ளம் மாற வேண்டும் என்பதை உணர்ந்து, அத்தகையோரிடம் 'உபதேசமொழிகளை'ச் சற்று தாராளமாகப் பொழிய பண்டித நேரு முற்படுவாராக! ஆனால் ஆஜ்மீரில் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் அவர் பேசிய பேச்சைப் பார்க்கும்போது 'பொருள் சரி; ஆனால் இடம் சரியல்ல' என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

ஃ

ஆசிரியர்

அவையெல்லாம் யார் கொடுத்த செல்வர்?

"நேரு நமக்குக் கடவுள் அளித்த செல்வம்" என்று தோழர் சி. இராசகோபாலாச்சாரியார் மைசூர் கல்வி அதிகாரிகள் மாநாட்டைத் திறந்துவைக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.

திறமைமிக்க நேரு கடவுள் கொடுத்த செல்வம் என்றால், இந்தியாவிலும், ஏன் உலகத்திலும் திறமையற்ற கோடானு கோடி மக்கள் யார் கொடுத்த செல்வமோ?' ஆச்சாரியாருக்கே அர்ப்பணம்! "எல்லாம் கடவுள் சிருஷ்டி; அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற கொள்கை ஆச்சாரியாருக்கு உடன்பாடானதே! அப்படியிருக்க, நேருமட்டும் எப்படிக் கடவுள் கொடுத்த செல்வமாக ஆச்சாரியாரின் 'திருக்கண்களுக்கு' படுகின்றதோ நாம் அறியோம் 'பராபரமே'! நேரு மட்டும் கடவுள் கொடுத்த செல்வம் என்றால், பஞ்சம், பசி, பட்டினி, வறுமை, ஏழ்மை, பிணி, காலரா, பிளேக், காசம், க்ஷயரோகம், அம்மை, கொலைஞர், வஞ்சகர், திருடர், சூதர், பொய்யர், புனைசுருட்டர், பொல்லாதார், பாம்பு, தேள், கொசு, மூட்டைப் பூச்சி, நரி, ஆச்சாரியார் இவையெல்லாம் யார் கொடுத்த செல்வமோ? கடவுளுக்கு மைத்துனனா, மாமனா, பங்காளியா, யார் கொடுத்தது? ஆச்சாரியார் தெளிவு பயப்பாரா?

ஃ ஃ ஃ

அந்தோ மறைந்தார்!

திராவிட முன்னேற்றக் கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களிலே ஒருவரும், அருமை நண்பரும் ஆன தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களின் அருமை மகனார் தோழர் இராமு அவர்கள் தமது 22-வது வயதில், அருமைத் துணைவியாரை விட்டு, துணைவியாரின் வயிற்றிலே மூன்றுமாதக் குழந்தையை விட்டு, கையிலே தவழும் குழந்தையைவிட்டு, தாய் தந்தையர், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் விட்டு இயற்கை எய்தினார் என்ற கொடிய துக்கச் செய்தி கேட்டுத் திடுக்கிற்றோம்; திகைப்புற்றோம்; ஏங்குகிறோம்; துயருறுகிறோம்! நண்பர் கல்யாணம் அவர்களையும், இராமுவின் துணைவியாரையும் நாம் என்ன சொல்லித் தேற்றமுடியும்! யாரோடும் அன்போடு பழகும் இராமு மறைந்தார் என்பதை நம்மால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை! வேதனை உள்ளத்தைக் குடைகிறது! இராமுவை இழந்து வருந்தும் துணைவியாருக்கும், தாய்தந்தையர்க்கும் ஏனையோர்க்கும் '**ஆறுதல்பெறுக**' என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூற இயலும்! நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக!

ஆளும் திறமையின் அழகு

1953-ம் ஆண்டில் அரசாங்கத்தார் கைவசமிருந்த உணவுதானிய இருப்பில், 10,345 மணங்கு; மனிதர்கள் சாப்பிடுவதற்கு ஏற்றதல்லாதவகையில் கெட்டுப்போய்விட்டதாம். அதன் விலை ரூ. 4,03,918 ஆகுமாம். இந்தத் திறமைக்கறிகுறியான செய்தியை அமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் சென்னைச் சட்டமன்றத்தில் வெளியிட்டுள்ளார்! காங்கிரஸின் அலங்கோல ஆட்சிக்குத், திறமைக் குறைவுக்கு இது சீரிய எடுத்துக்காட்டாகும்! ஏழ்மை நிரம்பிய இந்த நாட்டில், ரூபாய் நான்கு லட்சம் துடைத்தெறியக்கூடிய ஒன்றா? நாட்டின் நல்லவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திருத்தம்

7-வது பக்கத்தில் 7-வது வரியிலும் 8-வது பக்கத்தில் 38-வது வரியிலும் 'மார்க்கோபோலோ' என்ற பெயருக்குப் பதிலாக 'வாஸ்கோடகாமா' என்று திருத்திப் படித்துக்கொள்க.

எமது புதிய வெளியீடு

அரசியல், இலக்கியம், கடவுள்கள், கலைகள், மதக்கொள்கை, தொழில்கள், விழாக்கள், பண்புகள்

இவைகள் அனைத்தும் இடம்பெறும்

பண்டை வரலாறு

நாவலர்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

எழுதிய

பண்டைக் கிரேக்கம்

விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

சூயஸ் கால்வாய்

இயற்கை வளம் பரந்துகிடந்த இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா முதலிய ஆசிய நாடுகளுடன், ஐரோப்பா பன்னெடுங் காலமாகவே வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. கி. பி. 1453-ல் துருக்கிய மன்னரால் போக்குவரத்து வழிகள் தடுக்கப்பட்டாலும், 1498-ல் மார்க்கோபோலோ என்பவர் ஆப்ரிக்காவைச் சுற்றி நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவந்தடையும் கடல் வழி யொன்றைப் புதிதாகக் கண்டுபிடித்தார். இதன்பின் ஆசிய-ஐரோப்பா வாணிபம் செழித்து வளர வழி ஏற்பட்டது.

இந்தியா, பர்மா, மலேயா முதலிய நாடுகளிலிருந்து மூலப் பொருள்களைப் (raw materials) பெற்றுக்கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகள், தொழில் வளர்ச்சியில் முன்னேறத்தொடங்கின. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா எங்கணும் அரிய பல புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பயனாக ஒரு 'தொழிற்புரட்சி' ஏற்பட்டது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி முதலிய நாடுகளில் பெருந் தொழிற்சாலைகள் பெருகின. தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்களை ஆசியாவிலிருந்து ஏற்றிவரவும், தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களை ஆசியாவிற்கு ஏற்றிச்செல்லவும், கப்பல்களும் கடல் வழியும் இன்றியமையாதனவாக அமைந்தன.

1765-ல் ஜேம்ஸ் வாட் என்பவர் நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தபின் அந்தச் சக்தியை உபயோகித்து விரைந்து செல்லும் நீராவிக் கப்பல் 19-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வணிக உலகம் பெரும்பயனடைந்தது. இங்கிலாந்திலிருந்து கடல் மூலம் இந்தியா வர அப்பொழுது ஆறு மாதங்களுக்கு மேலாயிற்று. ஆனால் நீராவிக் கப்பல் தோன்றியதும் 3 மாதங்களில் இந்தியா சேர முடிந்தது.

என்றாலும், இந்தியா வருவதற்கு ஆப்பிரிக்காக் கண்டத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவரவேண்டியதாயிற்று. இதைவிடக் குறுகிய வழி யொன்றைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஐரோப்பியர் எல்லோருக்கும் ஏற்பட்டது. அந்த முயற்சியின் முடிவாக வெட்டப்பட்டதுதான் சூயஸ் கால்வாய்.

சூயஸ் கால்வாய் 1869-ம் ஆண்டு திறக்கப்பட்டது. அது மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைத்து, ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் குறுகிய கடல் வழியைக் காட்டிநிற்கும் ஒரு செயற்கைக் கால்வாய். பெர்டிணான்ட் டி லெசப்ஸ் என்ற பிரெஞ்சுப் பொறியியல் அறிஞர் இதனைக் கட்டிமுடித்தார். சூயஸ் கால்வாய் ஆசிய-ஐரோப்பிய வணிகத்துறை செழிக்க உறுதுணையாக இருக்கின்றது. நீராவிக்கப்பல் கடற்பயணகாலத்தைக் குறைத்தது போல் சூயஸ் கால்வாயும் கடற்பயண தூரத்தைக் குறைத்தது.

சூயஸ் கால்வாய் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வெட்டப்பட்டதென்றாலும், மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் ஒரு கால்வாய் மூலம் இணைக்கவேண்டும் என்ற திட்டம், இன்றைக்குச் சற்றேறக்குறைய 3500 ஆண்டுகளுக்குமுன் சிறந்தோங்கி வாழ்ந்த எகிப்திய மன்னரது திட்டம் என்பது வரலாறு மூலம் அறியக்கிடக்கின்றது.

கி. மு. 19-வது நூற்றாண்டில் நைல் நதி மூலம் சூயஸ் பகுதிக்கு ஒரு கால்வாய் இழுக்கப்பட்டு, செங்கடலும், மத்தியதரைக்கடலும் ஒன்றுசேர்க்கப்பட்டது. கி. மு. 1300-ல் ஆண்ட முதலாவது சேடி (Seti I) என்ற மன்னன் காலம்வரை இக்கால்வாய் உபயோகத்தில் இருந்துவந்தது. பின் கி. மு. 1198—1167-ல் ஆட்சி செலுத்திய மூன்றாவது ரமேசங் காலத்தில் கால்வாய் அழிந்துபட்டது என்பது தெரிய வருகிறது. நைல் நதியின் வண்டல் படிவுதான் அழிவிற்குக் காரணமாக இருக்கக்கூடுமென கருதுகின்றனர். இன்றும் வாடிதுமிலத் (Wadi Tumilat) பகுதிகளில் கால்வாய் இருந்ததின் அறிகுறிகள் தென்படுகின்றன

இதன்பிறகு, கி. மு. 600-ல் எகிப்தை ஆட்சி செலுத்திவந்த நேகோ(Necho)என்ற மன்னன் நைல் நதியையும், செங்கடலையும் இணைக்க ஒரு கால்வாய் வெட்டத்தொடங்கினான். ஆனால் நைல் நதியின் வெள்ளப் பெருக்கும், புயற்காற்றும், கால்வாய் வேலைகளைத் தடுத்ததோடல்லாமல், ஹிராடஸ் (Herodotus) கூற்றுப்படி 1,20,000 பேர் மாண்டனர் என்று தெரிகிறது. 80 ஆண்டுகளுக்குப்பின் வந்த டேரியஸ் (Darius - 520 B. C) என்ற மன்னன் வேலையைத் தொடர்ந்து வெற்றிகண்டானெனினும், கால்வாய் முற்றிலும் செங்கடலுடன் இணைக்கப்படவில்லை. கி. மு. 285-ல் தான் இக்குறை பிலடேல்பஸ் என்ற மன்னனால் நீர்க்கப்பட்டது. கிளியோபாத்ரா (கி. மு. 44—30) காலத்தில் கால்வாயில் வண்டல் படிவு அதிகமாகி ஆழக்குறைவாகப் போனதால் மத்தியதரைக் கடலிலிருந்து கப்பல்கள் வர இயலாமற்போய்விட்டது. ரோமன் ஆட்சிக்காலத்தில் புபாஸ்டிலிருந்து செங்கடல் வரை கால்வாய் பழுதுபார்க்கப்பட்டது. டிராஜன் என்ற மன்னன் புபாஸ்டிலிருந்து நைல் நதிக்கரையில் இருந்த பாபிலோன் (கெய்ரோ) நகரத்திற்கு ஒரு கால்வாய் வெட்டினான். ஆனால் பிற்பட்டுவந்த முஸ்லீம் ஆதிக்கத்தின்போது துருக்கி மன்னன் கி. பி. 770-ல் எதிரி நாடான அரேபியாவிற்கு போக்குவரத்தைத் தடுக்கக் கால்வாயை மூடிவிட உத்தரவிட்டான். கி. பி. 1000-ல் ஹக்கிம் என்ற மன்னன் கால்வாயைப் புதுப்பித்தாலும், ஆண்டுதோறும் நைல் நதியின் வெள்ளப்பெருக்கால் வண்டல் படிந்து கால்வாய் மூடப்பட்டுவந்தது.

நைல் நதியின் தொடர்பில்லாமல் செங்கடலையும், மத்தியதரைக்கடலையும் ஒரே நேரான கால்வாய்மூலம் இணைக்கவேண்டும் என்ற திட்டம் கி. பி. எட்டாம் நூற்றாண்டில்தான் வகுக்கப்பட்டது. ஆனால் அரசியல் சூழ்நிலை காரணமாக முயற்சி கைவிடப்பட்டது. மார்க்கோ போலோ பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக ஒரு கடல் வழியைக் கண்டபிறகு, வெனிஸ்காரர்கள் நேரான ஒரு கால்வாயை வெட்ட எகிப்தியரைத் தூண்டினர். ஆனால் துருக்கியரின் ஆதரவு கிடைக்காததால் திட்டம் நிறைவேறவில்லை. நெப்போலியன் கி. பி. 1798-ல் எகிப்தில் தங்கியிருந்தபோது, கால்வாயை வெட்டத் தகுந்த திட்டத்தை வகுக்கக் கட்டளையிட்டான். லெபயர் என்ற பொறியியல் அறிஞர் முயற்சியில் ஈடுபட்டு, மத்தியதரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் நீர்மட்டத்தில் 29 அடி ஏற்றத்தாழ்வு இருப்பதாக வெளியிட்டார். இதனால் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் 1846-ல் ஆரம்பிக்கப்பட்ட சூயஸ் கால்வாய் ஆராய்ச்சிக் கழகம் லெபயரின் கூற்றை மறுத்து தவறென நிரூபித்துக் காட்டியது. பிறகு 1854 வரை எவ்வித முயற்சியும் காணப்படவில்லை.

1854-ல் பெர்டிணண்ட் டி லெசப்ஸ் (Ferdinand de Lesseps) என்ற பிரெஞ்சுப் பொறியியல் அறிஞர் ஒரு திட்டம் வகுத்து கால்வாயை வெட்ட முன்வந்தார். மூவாயிரம் ஆண்டுகளாக, மன்னர் பலரால் அவ்வப்போது முயற்சி செய்யப்பட்டுக் கைவிடப்பட்ட கால்வாய்த் திட்டத்தை, டிலெசப்ஸ் மேற்கொண்டு, அல்லல் பல ஏற்று, பத்து ஆண்டுக்காலம் உழைத்து, பெரும்பொருள் செலவில் சூயஸ் கால்வாயை வெட்டி, மத்தியதரைக்கடலையும் செங்கடலையும் இணைத்தார்.

1854-ம் ஆண்டு நவம்பர் திங்கள், 30-ம் நாள், டிலெசப்ஸ் எகிப்து வைசிராயாக இருந்த செயிட் பாஷா என்பவரிடமிருந்து கால்வாய் வெட்டுவதற்குரிய சலுகையைப் பெற்றார். அதன்படி சூயஸ் கப்பற்கால்வாய் உலகப்பொதுமைக்கூட்டுக்குழு (Compagnie Universelle du canal Maritime de Suez) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுவிற்கு கால்வாயின்கண் உள்ள உரிமைக் காலம், கால்வாய் திறக்கப்பட்ட நாளிலிருந்து 99 ஆண்டுகளென வரையறுக்கப்பட்டது. அதாவது 1968-ம் ஆண்டு சூயஸ்கால்வாயின் முழு உரிமை எகிப்து நாட்டிற்குச் சேர்ந்துவிடும். அதற்கு ஈடாகக் கால்வாய் கூட்டுக்குழுவிற்கு ஒரு அளவு தொகை கொடுக்கப்படும். இவ்வாறு எகிப்திய வைசிராயால் அளிக்கப்பட்ட சலுகைக்குத் துருக்கிச் சுல்தானின் அனுமதி பெறவேண்டியிருந்தது. அது எளிதில் கிடைத்துவிடவில்லை. கால்வாய்க்கு அனுமதி அளித்தால் அது பிரெஞ்சு ஆதிக்கத்தை வளர்த்து, தமது கடலாணையைக் குறைக்கும் என்று கருதிய இங்கிலாந்தின் தந்திரமான எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருந்தது.

அனுமதியைப் பெற்ற டிலெசப்ஸ் தமது வேலைகளைத் தொடங்கினார். கால்வாயின்

அமைப்பையும் அதன் போக்கையும் வகுத்தார். இதற்கிடையில் எகிப்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க திட்டத்தில் சிறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி நேரான கால்வாய் வெட்டுவதுடன், நைல் நதிக் கரையிலிருக்கும் கெய்ரோவிலிருந்து டிம்சா ஏரிக்கும், அதிலிருந்து மத்தியதரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் ஆக மூன்று ஆற்றுநீர் கால்வாய்களையும் வெட்டவேண்டும் என்பது சேர்க்கப்பட்டது.

திட்டத்தை நிறைவேற்ற பெருமளவில் பொருள் வசதியும், போதுமான பணியாட்கள் பலமும் தேவைப்பட்டது. 1858-ம் ஆண்டு சூயஸ் கப்பற்கால்வாய் உலகப் பொதுமைக் கூட்டுக்குழுவின் பெயரால், 20,00,00,000 பிராங்குகள் (சுமார் 12 கோடி ரூபாய்) மூலதனத்தைக்கொண்ட 4,00,000 பங்குச் சீட்டுகள் வழங்கப்பட்டன. பங்குச்சீட்டுகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவாகவே வழங்கப்பட்டிருந்தும், இங்கிலாந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா ரஷ்யா போன்ற பெரிய நாடுகள், சூயஸ் கால்வாயின் அவசியத்தை உணராததாலும், பிரான்சு நாட்டின் அதிகாரம் வளரும் என்ற எண்ணத்தாலும், பங்குச்சீட்டுகளை வாங்க முன்வரவில்லை. பிரான்சு, எகிப்து, துருக்கி, டென்மார்க் முதலிய நாடுகளில்தான் பங்குச் சீட்டுகள் வாங்கப்பட்டது பிரெஞ்சு நாட்டில் மட்டும் 2,00,000 சீட்டுகளுக்குமேல் பணம் கொடுக்கப்பட்டது. துருக்கியில் 96,000 சீட்டுகளுக்குமேல் வழங்கப்பட்டன.

பிரான்சு, துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளில் கிடைத்த பணத்தைக்கொண்டு கால்வாய் வேலையைத் தொடங்கினர் டிலெசப்ஸ். 1859-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள், மத்தியதரைக்கடலோரமுள்ள செயிட் துறைமுகத்திற்கருகில் கால்வாயின் முதல் வேலை ஆரம்பமாகி மண் எடுக்கப்பட்டது. முதல் நான்கு ஆண்டுக்காலத்திற்குள் ஆற்று நீர் வாய்க்கால்கள் வெட்டி முடிக்கப்பட்டன. கால்வாய் வேலை மிகத் தாமதமாக நடந்தேறி வந்தது. வேலைக்கு ஆட்கள் எகிப்திலேயே கிடைத்தனர். செயிட் பாஷா கொண்டுவந்த கட்டாய வேலை முறையினால் அதிக ஆட்கள் வந்து சேர்ந்தனர் வேலை துரிதமாக்கப்பட்டது. கட்டாய வேலை முறையில அமர்ந்த பணியாட்களுக்கு, கூலி, உணவு, இடம் ஆகியவை வேண்டிய அளவிற்குக் கொடுக்கப்பட்டிருந்தும், செயிட் பாஷாவிற்குப் பின் வந்த இஸ்மாயில் என்பவர் கட்டாய வேலை முறையை எதிர்த்துத் துருக்கிச் சுல்தானிடம் முறையிட்டார். கால்வாய்க் கூட்டுக்குழுவும் இதற்கிணங்க மறுத்ததால், தகராறைத் தீர்க்க, பிரான்சு மன்னன் மூன்றாவது நெப்போலியனின் உதவி நாடப்பட்டது. பிரான்சு மன்னன் தீர்ப்பின்படிக் கட்டாய வேலை முறை ஒழிக்கப்பட்டது. செயிட் பாஷாவிடமிருந்து கால்வாய்க்கூட்டுக்குழு வாங்கிய சில நிலங்கள் திருப்பித்தரப்பட்டன. இவைகளுக்காகவும் ஆற்று நீர் கால்வாய்கள் வெட்டியதற்காகவும் எகிப்து அரசாங்கம் கால்வாய்க் கூட்டுக்குழுவிற்கு 8 கோடியே 40 லட்சம் பிராங்குகள் 15 ஆண்டுகளில் தரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கட்டாய வேலைமுறை ஒழிந்தபின் கால்வாயை வெட்ட இயந்திர சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டதால் வேலையை விரைவாக முடிக்க வழி ஏற்பட்டது.

1865-ம் ஆண்டு, டிலெசப்ஸ், 100-க்கு மேற்பட்ட பல நாட்டு வணிகக் கழகங்களின் பிரதிநிதிகளை அழைத்து ஒரு விருந்தளித்து கால்வாயின் வேலைகளையும் அதன் உபயோகத்தையும் விளக்கினர். கால்வாய் முடிவு பெறுவதற்குள் அடிக்கடி பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுக் கடன் வாங்கவேண்டிய நிலைமை வந்தது. கால்வாய் வெட்டி முடிப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை மொத்தம் 43,28,07,882 பிராங்குகளாகும் (சுமார் 26 கோடி ரூபாய்கள்). கால்வாய் 100 மைல்களுக்கு நீண்டு, மத்தியதரைக்கடலில் உள்ள செயிட் துறைமுகத்தில் ஆரம்பமாகி, எல்காண்டரா வழியாக, டிம்சா ஏரி (Lake Timsa), பிட்டர் ஏரி (Lake Bitter) ஆகிய ஏரிகளுடன் கலந்து பின் செங்கடலில் உள்ள சூயஸ் துறைமுகத்திற்குச் செல்கிறது. ஆரம்பத்தில் கால்வாய் 72 அடி அகலத்தையும் 26 அடி ஆழத்தையும் கொண்டதாக விளங்கியது. ஆனால் தற்பொழுது அகலம் 150 அடியாகவும் ஆழம் 33 அடியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

1869-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ம் நாள் கால்வாயின் திறப்புவிழா நடைபெற்றது. அன்று 68 கப்பல்கள் செயிட் துறைமுகத்திலிருந்து கால்வாய்க்குள் நுழைந்தன. 1870-ம்



ஆண்டில் 500 கப்பல்களுக்குமேல் கால்வாயைக் கடந்து சென்றன. கால்வாயைக் கடந்துசெல்ல ஆரம்பத்தில் 36 மணிநேரம் பிடித்தது. 1887-க்குப்பின் மின்சார வசதிகள் ஏற்பட்டவுடன் இரவிலும் கப்பல்கள் செல்லமுடிந்ததால் கடக்கும் நேரம் பாதியாகக் குறைக்கப்பட்டது. தற்பொழுது 12 மணி நேரத்தில் கப்பல்கள் கால்வாயைக் கடந்துசெல்ல முடிகின்றது.

சூயஸ் கால்வாய் பொதுக் கால்வாயாக அமைக்கப்பட்டு எல்லா நாட்டுக் கப்பல்களுக்கும் தடையேதுமின்றி அனுமதி தரப்பட்டது. கால்வாயைக் கடந்து செல்லும் ஒவ்வொரு கப்பலும், ஏற்றிச் செல்லும் பொருள்களின் எடைக்குத் தகுந்தாற்போல் கால்வாய்க் கூட்டுக் குழுவிற்கு கட்டணம் செலுத்தியது. ஆரம்பத்தில் ஒரு டன் எடைக்கு 13 பிராங்குகள் வீதம் கட்டணம் பெறப்பட்டது. பின் போக்குவரத்துக்கள் அதிகரிக்கவே கட்டணத் தொகை குறைந்து தற்பொழுது டன் எடைக்கு $7\frac{1}{2}$ பிராங்குகளாக இருக்கின்றது. இதுவே கால்வாய்க் கூட்டுக் குழுவின் வருமானமாகும்.

முதலில் கால்வாய்ப் பங்குச் சீட்டுகளை வாங்க முன்வராத இங்கிலாந்துதான் சூயஸ் கால்வாயின் முழுப்பயனைப் பெற்றது. இந்தியா, பர்மா, மலேயா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்ததால், இங்கிருந்து மூலப் பொருள்களை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1870—80 ஆகிய பத்து ஆண்டுகளில் சூயஸ் போக்குவரத்தின் முக்கால் பாகம் பிரிட்டிஷ் கொடியின்கீழ் நடைபெற்றதாகும். சூயஸ் கால்வாயின் உபயோகத்தைப் பெரிதும் உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் 1875-ல் எகிப்தை ஆண்ட இஸ்மாயில் என்பவரிடமிருந்து 1,76,602 பங்குச் சீட்டுகளை சுமார் 40,00 000 பவுன் (சுமார் 6,00,00,000 ரூபாய்) கொடுத்து வாங்கியது. இதனால் கால்வாய்க் கூட்டுக் குழு நிர்வாகத்தில் நல்லதொரு அதிகாரத்தை நிலைநாட்டியது. 19 பிரெஞ்சுக்காரர், 10 ஆங்கிலேயர், இரு எகிப்தியர், ஒரு டச்சுக்காரர் ஆக 32 பேர் நிர்வாகக்குழுவில் அமர்ந்திருந்தனர்.

எகிப்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்டிருந்ததால் இங்கிலாந்து சூயஸ் கால்வாயின் பொதுமைக் கொள்கையை ஏற்றுக்கொண்டாலும், அதன் படைபலத்தால் எதையும் செய்யலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இது கண்ட பிரான்சு, 1888-ல் கான்ஸ்டான்டிநோபிலில் ஒரு மாநாட்டைக் கூட்டியது. மாநாட்டில், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து, ருஷ்யா, துருக்கி, முதலிய நாடுகள் கலந்துகொண்டன அதில் சூயஸ் கால்வாய் பற்றிய ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி "சூயஸ்கால்வாய், போர்க்காலத்திலும் சரி சமாதான நேரத்திலும் சரி—எப்பொழுதும், தடையேதுமின்றி திறக்கப்பட்டிருந்து, போர்க்கப்பலானலும், வணிகக் கப்பலானலும்,—எல்லாக் கப்பல்களுக்கும் நாட்டுப் பாகுபாடு பாராமல் வழிவிடவேண்டும்

என்ற கொள்கைக்கு எல்லா நாடுகளும் உடன்பட்டன. சூயஸ் கால்வாயின் இப்பொதுமைக் கொள்கைக்கு இங்கிலாந்துதான் பாதுகாவலனாக இருந்துவந்தது.

இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி, ஹாலந்து, பிரான்சு, டச்சு, ஜப்பான் ஆகிய நாடுகள் சூயஸ் போக்குவரத்தில் பங்குகொண்டன. இதில் இங்கிலாந்தின் பங்கு பாதிக்கு மேலாகும். மத்திய கிழக்கு நாடுகளாகிய பாரசீகம், ஷாடி அரேபியா, ஈராக், எகிப்து ஆகிய நாடுகளில் எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டபின் சூயஸ் கால்வாயின் உபயோகம் முன்னிலும் பன்மடங்கு பெருகியது.

கால்வாயின் உபயோகம் அதிகரித்து வரவர, அதன் பொதுமைக் கொள்கையை நன்கு பாதுகாத்து வரவேண்டிய நிலையும் வளர்ந்து வந்தது. எகிப்து பிரிட்டிஷாரின் பார்வைக்குள் இருந்தாலும் அன்னிய ஆதிக்கத்திற்கு எகிப்தியரின் எதிர்ப்பு இருந்துவந்தது. இந்த நிலைமையால் கால்வாயைப் பாதுகாக்கவேண்டி 1936-ல் இங்கிலாந்து எகிப்துடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி 10000 வீரர்கொண்ட பிரிட்டிஷ்படை சூயஸ் பகுதிகளில் முகாமிட்டு கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றது. அங்கு ஒரு விமானக் கூடமும் நிறுவப்பட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தம் வரை சூயஸ் கால்வாயைக் கப்பல்கள் தடையேதுமின்றிக் கடந்துவர பிரிட்டிஷ் படை பாதுகாப்பு அளித்துவந்ததால், 1888-ம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபில் தீர்மானத்தின் பொதுமைக் கொள்கை உடைபடாமல் இருந்தது. ஆனால் 1949-ல், எகிப்து, இஸ்ரேல்மீது கொண்டிருந்த பகைமையின் காரணமாக, பாரசீகவளைகுடாவிலிருந்து இஸ்ரேலுக்குச் செல்லும் எண்ணெய்க் கப்பல்களுக்குக் கால்வாயில் அனுமதிதர மறுத்தது. அலெக்ஸாந்திரியா, செயிட், சூயஸ் ஆகிய துறைமுகங்களில் கப்பல்கள் சோதனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டன. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் பாரிசில் கூடி விடுத்த கூட்டு வேண்டுகோளை எகிப்து நிராகரித்தது. 1950-ல் பிரிட்டிஷ் கூறிய உடன்பாட்டை ஏற்க மறுத்ததோடு 1936-ன் ஆங்கிலேய—எகிப்திய உடன்படிக்கையையும் ஏற்க மறுத்து, எகிப்தில் கிளர்ச்சி எழுந்தது. பிரிட்டிஷாரின் வெளியேற்றத்தை விரும்பிய எகிப்தியர் சூயஸ் பகுதிகளிலுள்ள ஆங்கிலேய அமைப்புகளைத் தாக்க ஆரம்பித்தனர். பிரிட்டிஷ் படையினரால் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. கனல் சூயஸ் பகுதியில் தணிந்துவிட்டாலும் கெய்ரோவில் கொழுந்துவிட்டெரிந்தது. 1952 ஜனவரி 26-ல் கெய்ரோவிலுள்ள பிரிட்டிஷாரின் காரியாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டு 10 ஆங்கிலேயரும் கொல்லப்பட்டனர். கலகத்தை அடக்க இயலாத எகிப்திய சர்க்கார் மறுநாளே கவிழ்ந்தது. ஆட்சிமுறையில் குழப்ப நிலை அதிகரித்தது. ஜூலை மாதத்தில் நாகீப் தலைமையில் இருந்த ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. எகிப்து மன்னன் பரூக் நாட்டைவிட்டு ஓடினார். 1953-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் நாளன்று எகிப்து குடியரசாக மாறிற்று. ஜெனரல் நாகீப் முதல் குடியரசுத் தலைவரானார்.

எகிப்துக்கும் இங்கிலாந்திற்கும் வளர்ந்த சச்சரவு நின்று சமாதானப் பேச்சு ஆரம்பமாயிற்று. ஒருமுறை முடிவுகாணாமல் பேச்சு வார்த்தையில் முறிவு ஏற்பட்டது. ஆனால் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1954-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ம் நாள் இங்கிலாந்து எகிப்து இரு நாடுகளுக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு இரு நாடுகளும் கையெழுத்திட்டன. அதன்படி, (1) இன்னும் 20 மாதங்களில் பிரிட்டிஷ் படைகள் வெளியேறிவிடவேண்டும் என்றும் (2) அரபு நாடுகளாவது துருக்கியாவது எந்தச் சமயத்தில் தாக்கப்பட்டாலும் பிரிட்டிஷ் படை மீண்டும் சூயஸ் தளத்தில் இடம்பெறும் என்றும். (3) இந்த உடன்பாடு ஏழு ஆண்டுக் காலம் நிலை பெற்றிருக்கும் என்றும், (4) சூயஸ் தளம் ராணுவமல்லாத ஒரு பிரிட்டிஷ் கூட்டுக்குழுவினால் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், முடிவுகொள்ளப்பட்டது. 1888-ம் ஆண்டுத் தீர்மானத்தை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

சூயஸ் கால்வாய் சச்சரவில் சமாதானம் ஏற்பட்டாலும் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் உள்ள பூசல் தீர்ந்ததாகக் கூறமுடியாது. எவ்வித சச்சரவுமின்றி மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியான நிலை ஏற்பட்டால்தான் சூயஸ் கால்வாயின் பொதுமைக் கொள்கை நிலைநாட்டப்படும். சூயஸ்கால்வாய் உலகில் ஒரு முக்கிய கடல்வழியாக விளங்குவதால், சூயஸ் பகுதியில் ஏற்படும் சமாதான நிலை எல்லா நாடுகளுக்கும் இன்றியமையாததொன்றாக இருக்கிறது.

தொடர் கதை

பனி வெளியிலே

[இரா. செழியன்]

கமலநாதனை அவள் முதன் முதல் சந்தித்தது, இன்றைக்கும் தங்கத்தின் மனக்கண் முன் நன்கு காட்சியளித்தது.

அன்று மாலை காந்திமதிநாதம் பிள்ளைக்கு ஒரு இன்ஜெக்ஷன் போட்டுவிட்டு—இப்பொழுது அவருடைய உடல்நலம் அபாய நிலை நீங்கி, குணமாகிவரும் நிலை வந்தது—தங்கம் கீழே வந்தாள். கையைக் கழுவிக்கொண்டு, திரும்பியபொழுது யாரோ ஒருவர், துடைத்துக்கொள்ள ஒரு துண்டை நீட்டினார்கள். தங்கம் அதில் துடைத்துக்கொண்டு, திரும்பக் கொடுக்கத் திரும்பியபொழுது அங்கே நின்று கொண்டிருந்தவர், அவள் நினைத்தபடி வீட்டு வேலைக்காரனாகத் தோன்றவில்லை. யாரோ அறிமுகமாகாத இளைஞர்! நெற்றியில் சுருண்ட மயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது, இதழோரத்தில் குறுநகை தவழ்ந்துகொண்டிருந்தது. தங்கம் திடுக்கிட்டுப்போய், கொடுக்கப்போன துணியை மீண்டும் எடுத்துக்கொண்டாள். பின் பேசாமல் தலையைத் தாழ்த்திக்கொண்டு, தோற்பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். போய்க்கொண்டிருக்கும் தன்னை, அவர் உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பதை திரும்பிப் பார்க்காமலே தங்கத்தால் உணர முடிந்தது. முகச் சாடையிலிருந்து, அவர்தான் காந்திமதிநாதம் பிள்ளையின் மகனாக இருக்க வேண்டும்.

தங்கம் வீடு சென்றாள், ஆனால் திடீரென்று அவளை ஏறிட்டுப் பார்த்த முகம், அதில் தவழ்ந்த குறுநகை, அவள் மனதில் அடிக்கடி தோன்றி மறைந்தன.

தந்தைக்கு உடல் நலமில்லையென்றதும், கமலநாதன் உடனே வந்துவிட்டான். ஆனால் டாக்டர் நஞ்சையாவும், தங்கமும் வந்து பார்க்கும்பொழுது வேறு எதையும் அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. டாக்டர் நஞ்சையா காந்திமதிநாதம் பிள்ளைக் குடும்பத்தின் டாக்டராவார். அன்றியும் தங்கத்தின் ஆசிரியர். அவர் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டு, கொடுக்கவேண்டிய மருந்துகளைப் பற்றிச் சொல்வார். தங்கம் அவற்றைக் குறித்துக் கொள்வாள். அப்பொழுதெல்லாம், தங்கத்தின் கவனம் வேறெதிலும் செல்லாததால், நோயாளியைத் தவிர வேறெவரையும் சரியாகக் கவனிக்கவில்லை.

மறுநாள் தங்கம் நோயாளியைப் பார்த்துவிட்டுக், கீழே வந்தபொழுது, கமலநாதனும் தொடர்ந்து வந்தான்.

“கார் அனுப்பட்டுமா?” என்று கமலநாதன் கேட்டான்.

“இல்லை, நன்றி! வீடு அருகாமையில்தான் இருக்கிறது!” என்று சொல்லிவிட்டு வீட்டை விட்டுக் கிளம்பினாள். தோட்டத்தில் கொஞ்ச தூரம் போனதும், மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். கமலநாதன் அங்கு நின்று பார்த்துக்கொண்டிருந்தான். சென்ற பார்வையைத் திரும்ப வாங்கி, தங்கம் நடந்தாள்.

அவளுக்காகக் காத்துக்கொண்டிருப்பது, வந்ததும் மாடிக்கு அழைத்துச் செல்வது, கீழே இறங்கிவந்ததும் வழியனுப்பி வைப்பது இவைகளைக் கமலநாதன் மிக ஒழுங்காகச் செய்து வந்தான்.

ஆனால், ஒரு நாள் மாலை, தங்கம் எதிர்பார்த்ததுபோல், கமலநாதன் அவளை வரவேற்கக் காத்திருக்கவில்லை. மேலே சென்று பார்த்த

பொழுது அங்கும் காணப்படவில்லை. காந்திநாதம் பிள்ளையிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, கமலநாதன் உள் வந்து சிறிதுநேரம் இருந்துவிட்டுப் போய்விட்டான். தங்கம் அவன்பக்கம் திரும்புவதற்குள் போய்விட்டான். வீடு செல்ல, கீழே வந்தபொழுதும், தங்கம் தயங்கித் தயங்கி, சுற்றிலும் பார்த்தபடி மெதுவாக நடந்துவந்தாள். அங்கும், வெளியில், தோட்டத்தில், எங்கும் அவரைக் காணோம்.

"இன்றுமட்டும் அவர் ஏன் ஒதுங்கிப்போய் விட்டார்? பேசக்கூடவில்லையே!" போகும் பொழுது தங்கம் நினைத்துப்பார்த்தாள். காரணம் அவளுக்குப் புரியவில்லை. தான் பேசியதில், நடந்துகொண்டதில், ஏதாவது தவறு நேர்ந்துவிட்டதோ என்று தங்கம் யோசித்தாள். நாள்தோறும், இரண்டொரு வார்த்தைகளைத்தவிர அவள் அதிகம் பேசினது கிடையாது. அவற்றில் குற்றம் வர நியாயமில்லை. பின் ஏன் அவர் அன்று அப்படி காணாதவர் போல நடந்துகொள்ளவேண்டும்!

சே! வீண் எண்ணங்கள்! அவர் யாரோ, நாம் யாரோ! காந்திமதிநாதம் பிள்ளை தன் தந்தைக்கு நண்பரென்றால், தனக்குத் தெரிந்தவரென்றால், அதைக்கொண்டு அவருடைய மகனும் நண்பராக, தெரிந்தவராக ஆகவேண்டுமென்று கட்டாயமில்லை.

தந்தையின் உடல்நலத்தில் உள்ள அக்கரையால், தான் ஒரு டாக்டர் என்ற முறையில் அவர் வரவேற்று மதிப்புத் தந்திருக்கலாம். அதை வைத்துக்கொண்டு........தன்னைப்போல் அவருக்கு இன்னும் பல பெண்களைத் தெரிந்திருக்கலாம், அதில் தவறொன்றுமில்லை. அவர்களில் யாரையாவது அவர் காதலித்தாலும்.......

"நமக்கு ஏன் இந்தக் கவலைகளெல்லாம்!" என்று தங்கம் தன் அறையிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து, தோற்பையிலிருந்த சாமான்களை எடுத்துவைத்தாள். அதிலிருந்து ஒரு வெள்ளைச் சதுரம்—ஒரு கடிதம் விழுந்தது!

தங்கம் அதை எடுத்தாள், படித்தாள்!

படிக்கும்பொழுது அவள் விரல்கள் நடுங்கின, முகம் சிவந்தது, கண்கள் மங்கின!

காதற் கடிதம்!

"எப்படி வெளியிடுவது என்று புரியவில்லை. உன்னை நான் காதலிக்கிறேன்."

கடைசியாக! மீண்டும் கடிதத்தைத் தங்கம் படித்தாள்.

"உன்னை நான் காதலிக்கிறேன்."

எதிர்பார்த்தது, இலேசாகக் கனவுகண்டது, இதோ! கடிதத்தில் இருக்கிறது.

"உன்னை நான் காதலிக்கிறேன்."

ஒரு கணம் தங்கத்திற்குக் கோபம் வந்தது. எவ்வளவு துணிவு, துடுக்குத்தனம்! ஒரு பெண்ணுக்குத் தனியாகக் கடிதம் எழுத! ஆனால்,

"உன்னை நான் காதலிக்கிறேன்."

நான் காதலிக்கிறேன், காதலிக்கப்படுகிறேன்.

கடிதத்தை மடித்துக்கொண்டு, தங்கம் எழுந்து நின்றாள். தரையின்மேல் நிற்பதாகத் தோன்றவில்லை. திடீரென்று ஒரு புயற்காற்று தோன்றி, அவளை ஆகாயத்தில் தூக்கிச் சென்று மேகமண்டலத்தில் உலவவிடுவதுபோன்றிருந்தது.

கடிதத்தை மீண்டும், மீண்டும் அவள் படித்தாள். கடிதத்திலிருந்த மற்றவைகளெல்லாம் மறைந்துவிட்டன. "நான் காதலிக்கிறேன்" எவ்வளவு அழகான சொற்கள்! இனிமையான வாக்கியம். "கமலநாதன்."

எவ்வளவு தித்திப்பான பெயர்!

மறுநாள் காந்திமதிநாதம் பிள்ளையைப் பார்த்தபொழுது, அருகில் நின்ற கமலநாதனை தங்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பேசாமல் பஞ்சை நனைத்து, கையில் தடவி, ஒரு ஊசியைப் போட்டுவிட்டு, "எப்படியிருக்கிறது, மூன்றுமணிக்கு மருந்து சாப்பிட்டீர்களா?" என்று வழக்கம்போல் கேட்டாள்.

கமலநாதன் இடைமறுத்து "மூன்றுமணிக்கு கொடுக்கவில்லை: தூங்கிக்கொண்டிருந்தார்கள். எழுந்ததும் கொடுத்தேன், மணி அப்பொழுது நான்கிருக்கும்." என்று சொன்னான். சிறிது அவகாசங்கொடுத்து, தங்கத்தைப் பார்த்து "டாக்டர்! நான் செய்ததில் தவறொன்றுமில்லையே!" என்று கேட்டான்.

அப்பப்பா! இந்த ஆண்கள் எவ்வளவு பொல்லாதவர்கள்! கமலநாதன் சொன்னதைக்

கேட்காதவள்போல, தலையைக் குனிந்துகொண்டு, தங்கம் வந்துவிட்டாள். அன்றைக்கும் ஒரு கடிதம்—நீண்டகடிதம் தோற்பையில் இருந்தது.

நாள்தோறும் கடிதங்கள் இருந்தன, சில சமயம் ஒரு நாளிலேயே இரண்டு மூன்று கடிதங்கள்! சில இரண்டுமூன்று வரிகளில் அடங்கியிருந்தன, சில இரண்டுமூன்று பக்கத்திற்கு நீண்டிருந்தன. அவற்றிலெல்லாம் குறையாத காதல் மணம் கமழ்ந்தபடி இருந்தது! அவரோ வழக்கறிஞர், சட்டமன்றத்தில் நின்று நீதிக்காகப் போராடுபவர், இங்கோ இதயமன்றத்தில் நின்று காதலுக்காக மன்றாடிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் இரவில் நீண்டநேரம் தங்கம் அந்தக் கடிதங்களை வைத்து—படிப்பது கூட இல்லை, ஒன்றாக அடுக்கிவைத்து அழகு பார்த்துக்கொண்டிருப்பாள்.

காந்திமதிநாதம் பிள்ளைக்கு நோய் குறைந்து, உடல் நிலை சீரடைய ஆரம்பிக்கும்பொழுது, தன்னுடைய மகனுக்கு மற்றொருவித நோய் வந்திருப்பதை அவர் காணாமலில்லை. தங்கம் வருகிறாளென்றால், மிகுந்த ஆவலுடன் கமலநாதன் காத்திருப்பதையும், வரவேற்பதையும், பேச்சுக் கொடுப்பதையும், கடைசியாக வழியனுப்புவதையும் அவர் கவனித்துவிட்டார். தங்கத்தைப் பற்றியும் குறை சொல்ல ஒன்றும் இல்லை. எனவே நோய் குணமடைந்து, நடமாட ஆரம்பித்ததும், முதலாவதாகக் கமலநாதனின் கல்யாணம் பற்றிய ஏற்பாடுகளைச் செய்தார்.

திருமணம் மிகச் சிறப்பாக, ஆடம்பரமாக நடைபெற்றது. ஆனால் தங்கத்தினுடைய உறவினர் யாரும் திருமணத்திற்கு வரவில்லை. திருமணம் என்று பேச்சு ஆரம்பித்ததுமே, அத்தை அஞ்சலையம்மாள் உடனே ஊருக்குக் கிளம்பிவிட்டாள். வேறு உறவினர்கள் அதிகம் வருவார்கள் என்று தங்கமும் எதிர்பார்க்கவில்லை.

திருமணம் முடிந்து ஒரு வாரத்துக்கெல்லாம் தங்கமும், கமலநாதனும் சென்னை வந்து சேர்ந்தார்கள். புது மணத் தம்பதிகள்! புது மண வாழ்க்கை! உல்லாசமும், வேடிக்கையும் மிகுந்த நாட்கள்!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்றாலும், ஏதோ நேற்று நடந்ததைப்போலிருக்கிறது.

தங்கத்தின் மனத்திரையில் இறந்தகால நிகழ்ச்சிகள் ஓடிக்கொண்டிருந்தன. வேண்டாத பகுதிகள் வேமாக, விருப்பமான பகுதிகள் மெதுவாக.

“தங்கம், தங்கம்!” என்று கமலநாதன் கூப்பிட்டான்.

“உம்...” என்று கண்ணைத் திறக்காமலே தங்கம் குரல்கொடுத்தாள்.

“சீக்கிரம் கிளம்பு, நாழியாகிவிட்டது! போகவேண்டும்!”

தங்கம் கண்ணைத் திறந்துபார்த்தாள். நன்றாக இருட்டிவிட்டது. வானத்தில் நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்துக்கொண்டிருந்தன. மாமரத்தின் இலைகள் கருமையான நிழல்கள்போல அசைந்துகொண்டிருந்தன. கொடி, செடிகளின் சிறு சலசலப்புடன், தோட்டம் அமைதியாக இருந்தது.

அந்தத் தோட்டத்தை கமலநாதன் வாங்கியிருந்தான். அந்த இடத்தில் தங்களுடைய வீட்டைக் கட்டிக்கொள்ளத் திட்டமிருந்தார்கள். விடுமுறை நாட்களில், ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் இருவரும் அந்தத் தோட்டத்துக்கு வந்துபோவார்கள். அதிலும், அந்த மாமரத்தடியில் பரவப்பட்டிருந்த மணல் திட்டில் அமர்ந்துவிட்டால், தங்கத்தின் மனம் நீண்ட கனவுகளைக் கட்ட ஆரம்பித்துவிடும்.

“எழுந்திரு, தங்கம்!” என்று கமலநாதன், தங்கத்தின் கையைப் பிடித்து, உட்காரவைத்தான். ஓய்வுதரும் மந்தநிலை அவளுடைய பார்வையில் படிந்திருந்தது.

தோட்டக்காரன் வந்து கதவுப் படலைத் திறந்துவைத்தான். காரை எடுத்துவந்து கமலநாதன் நிறுத்தினான். தங்கம் அவனருகில் அமர்ந்துகொண்டாள்.

நீண்டசாலையின் வளைவு, நெளிவுகளை அலட்சியப்படுத்திக்கொண்டு கார் வேகமாகப் பறந்து வந்துகொண்டிருந்தது.

“இவ்வளவு வேகமாக எதற்கு?” என்று தங்கம் முனகினாள்.

“பயமாக இருக்கிறதா?” என்று கமலநாதன் சிரித்துக்கொண்டு, இன்னும் வேகமாகக் காரைச் செலுத்தினான்.

“ஏதாவது சரிவில் விழுந்தால்....”

“நீ என் பக்கத்தில் இருக்கும்பொழுது, செத்துப்போவதைப்பற்றி நான் ஏன் பயப்பட வேண்டும்?”

(தொடரும்)

[267ம் பக்கம்]

மூட நம்பிக்கையும் அறிவியலும்

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

நாம் அறிந்திருக்கும் கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும், கொள்கைகளையும் ஒரு சேர வைத்துப் பார்த்தால், நாம் மிகச் சொற்பமாகத் தான் அறிந்திருக்கிறோம் என்பது தெரியவரும். வாழ்க்கை என்னும் இருட்படலத்தில், சிற்சில ஒளிக்கதிர்கள் தோன்றியிருக்கின்றன. தட்டுத் துடைக்கும் துணி கீழே விழுவது, விருந்தினர் வருகையை அறிவித்தாலும் அறிவிக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்றுமட்டும் ஏதும் கிடைப்பதில்லை! பதின்மூன்றுபேர்கள் உட்கார்ந்து சாப்பிடுவது ஆபத்தை உண்டாக்கினாலும் உண்டாக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்றுமட்டும் ஏதும் கிடைப்பதில்லை! ஒரு ஆப்பிள் பழத்திலுள்ள விதைகளின் எண்ணிக்கையோ அல்லது ஒரு மலரிலுள்ள இதழ்களின் எண்ணிக்கையோ ஒரு பெண்ணின் திருமண மாற்றங்களை அறிவித்தாலும் அறிவிக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! சில கற்களை அணிந்துகொள்வதால் நன்மையும், ஏனையவற்றை அணிந்துகொள்வதால் இழப்போ அல்லது சாவோ ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்; ஆனால் சான்று ஏதும் இல்லை! திங்களை இடதுதோளின் மேலாகப் பார்ப்பது தீய வாய்ப்பை அளித்தாலும் அளிக்கக்கூடும்; ஆனால் சான்று ஏதும் இல்லை! பழைய எலும்புகள், புனிதக் கந்தல்கள், பரிசுத்த மயிர்கள், உருவத்தோற்றங்கள், மரத்துண்டுகள், துருப்பிடித்த ஆணிகள், காய்ந்த குருதி ஆகியவைகள் நலம் பயக்கும் நன்மைகளாக இருந்தாலும் இருக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! வால் நட்சத்திரங்கள், கிரகணங்கள், விண்வீழ்கொள்ளிகள், அரசர்களின் இறப்பையும், நாடுகளின் அழிவையும், அல்லது பிளேக்கின் வருகையையும் முறையே முன்கூட்டித் தெரிவிப்பனவாக இருந்தாலும் இருக்கக்கூடும்; ஆனால், அதற்குச் சான்று ஏதும் இல்லை! பிசாசுகள் மனிதர்களின் உடல்களையும், உள்ளங்களையும் தம் வயப்படுத்தினாலும் படுத்தக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! மந்திரவாதிகள் பூதத்தின் உதவியினால், காற்றுகளை அடக்கவும், நிலத்திலும் நீரிலும் புயல்களை உண்டாக்கவும், கோடைகாலத்தில் பனிப்படலத்தையும் பனிக்கட்டிகளையும் உண்டாக்கவும், மந்திரத்தால் வேலைசெய்து காட்டவும், பொதுமக்களின் மகிழ்ச்சிக்கு மாறுபாடாகச் சபிக்கவும் ஆன செயல்களைச் செய்தாலும் செய்யக்கூடும்; ஆனால், அதற்குச் சான்று ஏதும் இல்லை! பழைய—புது வேதங்களில் சொல்லப்பட்டுள்ள அதிசயக்காட்சிகளெல்லாம் நிரூபித்துக் காட்டப்பட்டாலும் படலாம்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! காய்ந்து வதங்கிப் போன இறந்த உயிர்களின் சதைப்பற்று, மீண்டும் உயிர் பெற்று எழுந்தாலும் எழக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! செத்து விழுந்த பிணம், உயிர்பெற்று எழுந்து, மனைவியும் குழந்தைகளும் இடும் முத்தங்களை உணர்ந்தாலும் உணரக்கூடும்; ஆனால் அதற்குச்சான்று ஏதும் இல்லை! தண்ணீர் திராட்சை ரசமாக மாற்றப்படுவதும், ரொட்டியும் மீன்களும் அதிகமாக்கப்படுவதும், ஆடவர்—பெண்டிர் உடம்புகளிலிருந்து பிசாசுகள் விரட்டப்படுவதும் ஆன நிகழ்ச்சிகள் நடந்தாலும் நடக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! மீன்கள் தமது வாய்களில் காசுகளைக் கொண்டிருந்தாலும் கொண்டிருக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை! களிமண்ணும் எச்சிலும் சேர்ந்து ஒளி இழந்த கண்ணுக்கு மீண்டும் ஒளியூட்டினாலும் ஊட்டக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும்

இல்லை! மந்திரச்சொற்கள் நோயைப் போக்கிக், குஷ்டத்தை நீக்கி நலம் விளைவித்தாலும் விளைவிக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை!

இரும்பு மிதப்பதும், ஆறு பிளப்பதும், காய்ந்த எலும்புகளிலிருந்து நீர் பிறிடுவதும், தேவதூதர்களுக்குப் பறவைகள் உணவு ஏந்திச் செல்வதும், உருவப்பட்ட வாள் முனையில் தேவதைகள் தோன்றுவதும் ஆன நிகழ்ச்சிகள் நடந்தாலும் நடக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று கிடையாது!

பொய் சொல்லும் ஆவிகளைக்கொண்டு ஜெஹோவா ஒரு அரசனை ஏமாற்றியதும், காட்டுமிராண்டிகள் அதிசயங்கள் பல செய்ததும் நடந்திருந்தாலும் நடந்திருக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை!

சாத்தான் என்ற பூதம் ஒன்று இருப்பதும், அவன் தந்திரமும் ஆற்றலும் கொண்ட எண்ணிறந்த பிசாசுகளைக் கொண்டிருப்பதும், மக்களுக்குத் தீங்கைச் சொல்லிக்கொடுப்பது, அவர்களை வெறுப்படையச் செய்வது, தவறான வழிகளில் ஈடுபடுத்துவது, சிறைபிடிப்பது, சிறையடைப்பதுபோன்ற தொழில்களை அந்தப் பிசாசுகள் செய்துகொண்டிருப்பதும் ஆன செயல்கள் நடந்தாலும் நடக்கக்கூடும்; ஆனால் நமக்கு ஏற்படும் தொல்லையெல்லாம், அதற்குச் சான்று ஏதும் இல்லை என்பதே! மதப்புரோகிதர்கள் வாயினால் கூறுவதைத் தவிர வேறு சான்று ஏதும் இல்லை!

நரகம் என்று சொல்லப்படும் ஒரு இடம் இருப்பதும், அங்கு பூதங்களெல்லாம் வாழ்வதும், சிந்திக்கவும் சிந்தித்த கருத்துக்களை வெளியிடவும் உறுதிபூண்டிருக்கிற மனிதர்களுக்காகவும், புரோகிதர்களுக்கும் புனித வேதங்களுக்கும் மதிப்புகொடுக்காதிருப்பவர்களுக்காகவும், பகுத்தறிவொளி காட்டும் பாதையில் நடந்துசெல்பவர்களுக்காகவும், ஏமாற்றுத்தனத்தையும் பக்தியையும் கொள்ளாது ஆண்மையோடும் நல்ல தன்மையோடும் இருப்பவர்களுக்காகவும் அந்த நரகத்தில் நெருப்புகள் எரிந்துகொண்டிருப்பது உண்மையாக இருந்தாலும் இருக்கக்கூடும்; ஆனால், நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன், அதற்குச் சான்று ஏதும் இல்லை என்று!

சுவர்க்கம் என்று ஒன்று இருப்பதும், அதனைக் கடவுள் வாழுமிடமாகச் சொன்டிருப்பதும், அங்கு தேவதைகள் ஓடியும் ஆடியும், பறந்தும் பாடியும், நரகத்தில் அவதிப்படுவோரின் கூச்சல்களையும், முணுமுணுப்புகளையும் கேட்டு மகிழ்ச்சிகொள்வதும் உண்மையாக இருந்தாலும் இருக்கக்கூடும்; ஆனால் அதற்குச் சான்று ஏதும் இல்லை!

இவையெல்லாம் பைத்தியக்காரர்கள் கண்ட கனவுகளிலும், காட்சிகளிலும் மட்டுமே நிலை நிற்கின்றன!

இயற்கைக்கு மீறிய ஆற்றல் ஒன்று இருப்பதும், அது உலகிலுள்ள பொருள்களையெல்லாம் காப்பாற்றிவருவதும், அது அவைகளுக்கு வழிகாட்டுவதும் ஆன செய்திகள் உண்மையாக இருந்தாலும் இருக்கக்கூடும்; ஆனால் அந்த ஆற்றல் இருப்பது நிரூபித்துக்காட்டப்படவேயில்லை!

பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கைகள்—எண்ணங்கள், ஆற்றல்—பொருள், வளர்ச்சி—அழிவு, பிறப்பு—இறப்பு, மகிழ்ச்சி—வருத்தம், நல்லவர்கள் துன்புறுவது—தீயவர்கள் வெற்றி பெறுவது ஆகிய இவற்றிற்கிடையே இருக்கும், எந்த அறிவுள்ள நாணயமான மனிதனும், "நான் அதனை அறியவில்லை" என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

ஆனால், நாம் அறிவோம், கடவுள்களும் பூதங்களும், சுவர்க்கங்களும் நரகங்களும் எப்படி உண்டாக்கப்பட்டன என்பதை. நாம் வேத நூல்களின் வரலாற்றையும், மதங்களின் உற்பத்தியையும் நன்கு அறிவோம். மூடநம்பிக்கை என்னும் விதைகள் எப்படி நடப்பட்டன என்பதையும், அவற்றை எது வளர்த்துவந்தது என்பதையும் நாம் அறிவோம். எல்லா மூட நம்பிக்கைகளும், எல்லாக் கோட்பாடுகளும், எல்லா முட்டாள்தனங்களும், எல்லாத் தவறுகளும், எல்லாக் குற்றங்களும், எல்லாக் கொடுமைகளும், எல்லா நன்மைகளும் தீமைகளும், எல்லா விருப்பங்களும் அச்சங்களும், எல்லாக் கண்டுபிடிப்புகளும் ஆராய்ச்சிகளும் இயற்கையாகவே உற்பத்திசெய்யப்பட்டன என்பதை நாம் அறிவோம். பகுத்தறிவு ஒளியின் உதவியினைக் கொண்டு, நாம், துன்புறுத்துவதினின்றும் பயன்படுவதைப் பிரிக்கிறோம்; பொய்யினின்றும் உண்மையைப் பிரிக்கிறோம்.

உ41

நாம், இறந்தகாலத்தையும், மனிதன் நடந்தேறிவந்த வழிகளையும், அவனுடைய தவறுகளையும், அவனது வெற்றிகளையும் அறிவோம். நாம், மிகச் சொற்ப உண்மைகளையும், மிகச் சொற்ப இயற்கையின் பகுதிகளையும், அறிவோம். இந்தத் தெரிந்த உண்மைகளையும், அறிந்த பகுதிகளையும் வைத்துக்கொண்டு, நாம், நமது கற்பனைத் திறனாலும், கலையுள்ளத்தாலும் இறந்தகாலத்தைப் புதுப்பிக்கிறோம்; இருக்கவேண்டியவைகளை வருங்காலத்திரையில் அறிவு வண்ணங்களால் தீட்டிக்காட்டுகிறோம்.

நாம் இயற்கையிலே நம்பிக்கை செலுத்துகிறோம்; உடையாத உடையமுடியாத இயற்கைக் காரணகாரியங்களின் தொடர்பில் நம்பிக்கை செலுத்துகிறோம். இயற்கைக்கு மீறிய ஆற்றல் இருப்பதாகச் சொல்லப்படுவதை நாம் மறுக்கிறோம். நறுமணப்புகை காட்டல், மண்டியிடுதல், மணியோசை ஒலித்தல், பாட்டுப்பாடல், ஜெபமணி உருட்டல், நோன்பிருத்தல், வழிபாட்டுரை கூறல் ஆகியவைகளால் மகிழ்ச்சியுறும் கடவுளை நாம் நம்புவதில்லை; அச்சத்தாலும், பக்தியாசையாலும் கூறப்படும் புகழ்ச்சிச்சொற்களை, விரும்பி நிற்கும் கடவுளை நாம் நம்புவதில்லை.

நாம் இயற்கையை நம்புகிறோம். நாம் பூதங்களையோ, பிசாசுகளையோ, நரகங்களையோ கண்டு அஞ்சுவதில்லை. மகாத்மாக்கள், தெய்வீக உடம்புகள், ஆவிகளின் உலகங்கள், மைபார்த்தல், எதிர்காலம் அறிதல், தொலைவிலுணர்தல், மனதை அறிதல், கிருஸ்தவ அறிவியல் இவையெல்லாம் தந்திரமான ஏமாற்று வித்தைகள் என்றே நாம் நம்புகிறோம்; நாணயமான சான்றுகளைக் கொண்டு இவையெல்லாம் நிரூபிக்கப்பட்டதில்லை. சில சமயங்களில் தந்திரம் என்னும் தட்டுகள் நாணயமென்னும் தங்கமுலாம் பூசப்பட்டும், தீமை நன்மை என்னும் முலாம் பூசப்பட்டும், ஏமாற்றப்படுகின்றன என்பதை நாம் அறிவோம்.

கோடிக்கணக்கான மக்கள், இல்லாத ஒன்றை வேண்டிக்கொண்டும், இயற்கைக்கு மீறிய ஆற்றலின் உதவியைத் தேடிக்கொண்டும், வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்க்க முயன்று கொண்டும், விதியின் விளையாட்டை ஊகித்துக் கொண்டும், எதிர்கால இரகசியங்களைப் பறித்துக்கொண்டும் காலந்தள்ளிவருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வெறும் வீணே என்பதை நாம் அறிவோம்.

நாம் இயற்கையை நம்புகிறோம். நாம், வீட்டிலும் குளிர்காயும் இடத்திலும், மனைவியிடத்தும் மக்களிடத்தும், நண்பர்களிடத்தும் உறவினர்களிடத்தும், உலகின் உண்மைகளிடத்தும் நம்பிக்கைவைக்கிறோம். நாம், உண்மைகளிடத்தும், அறிவினிடத்தும், மூளை வளர்ச்சியினிடத்தும் நம்பிக்கை வைக்கிறோம். நாம் மூடநம்பிக்கையை உதறித்தள்ளுகிறோம்; அறிவியலை வரவேற்கிறோம். நாம், மாயைகளையும், தவறுகளையும், பொய்களையும் அகற்றுகிறோம்; உண்மையைப்பற்றி நிற்கிறோம். நாம், அறியாததொன்றை அரியணையில் ஏற்றமாட்டோம்; அறியாமைக்கு என்றும் முடிசூட்டமாட்டோம். நாம், நமது முதுகுப்புறத்தைக் கதிரவனுக்குக்காட்டி நின்று, நம்முடைய நிழலையே கடவுள் என்று கூறி நிற்கமாட்டோம்.

நாம், நாமே ஒரு ஆண்டையை உண்டாக்கிக் கொண்டு, அது அளிக்கும் விலங்குகளை நன்றியோடு பெற்று மாட்டிக்கொள்ள மாட்டோம். நாம், நம்மையே அடிமைகளாக்கிக்கொள்ள மாட்டோம். நாம் தலைவர்களையும் விரும்போம்; சீடர்களையும் விரும்போம். ஒவ்வொருவனும் இலஞ்சத்துக்காளாகாத உறுதிமொழிகளையும், அச்சுறுத்தல்களுக்குக் கவலைப்படாத தன்மையையும், தனக்கும் தன்னுடைய கொள்கைக்கும் உண்மையாக நடந்துகொள்ளும் பண்பையும் கொண்டு விளங்கவேண்டும் என்பதே நமது விருப்பம். கொடுங்கோலன் மண்ணிலேயோ அல்லது விண்ணிலேயோ இருப்பதை நாம் விரும்பவில்லை.

மூடநம்பிக்கை, ஏமாற்றுதல்களையும் வஞ்சித்தல்களையும், கனவுகளையும் காட்சிகளையும், சடங்குகளையும் கொடுமைகளையும், பக்தியையும் பைத்தியக்காரத்தனத்தையும், பிச்சைக்காரர்களையும் போக்கிரிகளையும், குற்றஞ்சுமத்தல்களையும் வழிபாட்டுரைகளையும், மதத்தத்துவத்தையும் சித்ரவதையையும், பரிதாபத்தையும் வறுமையையும், மகான்களையும் அடிமைகளையும், சடங்குகளையும் வேதமந்திரங்களையும், நோயையும் சாக்காட்டையும் நமக்கு அளித்துள்ளது என்பதை நாம் அறிவோம்!

மதிப்பிடத்தக்கப் பொருள்களனைத்தையும், அறிவியல், நமக்கு அளித்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். அறிவியல் ஒன்றுதான் நாக

அப்படிச் செய்யாதீர் அன்பரே !-1

[இரா. நெ.]

'தேவதைகள் நுழைய அஞ்சும் இடத்தில், பேய்கள் துணிவுடன் நடமாடும்' என்பது கற்பனைப் பழமொழி

அந்தக் கற்பனைப் பழமொழியை நமக்கு நினைவூட்டுவதோடு, அதற்குத் தன்னை முழுக்க முழுக்க இலக்காக்கிக்கொண்டுள்ளார் தம்மைத் தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர். தமிழ் கற்றுத் தமிழிலே ஈடும் எடுப்பும் அற்றுத் தேர்ந்து விளங்கிய சான்றோரும் ஆன்றோரும் நுழைய அஞ்சிய இடத்தில், அந்த நண்பர் ஆடிப்பாடி, குதித்து மகிழ்வு கொள்கிறார். தமிழ்ச் சான்றோரும், ஆன்றோரும் செய்ய நினைக்காத எந்தச் செயலை அந்த நண்பர் செய்யத்துணிந்துவிட்டார் என்று கேட்கத்தோன்றுகிறதல்லவா ? தமிழ் எழுத்துக்களிலே சீர்திருத்தம் செய்யவேண்டுமாம்; இதனைக்கூற முன்வந்துவிட்டார் அவர் !

"பூ! இவ்வளவுதானா! இதில் நெஞ்சு பதறிட என்ன இருக்கிறது? தொல்காப்பியனாரிலிருந்து, பெரியார் இராமசாமி வரையில், நமக்குத் தெரிய, எவ்வளவோபேர்கள், தமிழ் எழுத்துக்களிலே சிலபல மாற்றங்களையும் திருத்தங்களையும் அவ்வப்போது செய்யத்தானே செய்திருக்கின்றனர்! மற்றொருவரும் அதைப்போன்றதொரு பணியைச் செய்ய முன்வந்துள்ளார் என்றால், அதில் தவறு எப்படிக் காணமுடியும்? சீர்திருத்தம் ஏற்றதாக இருந்தால் எடுத்துக்கொள்வது நலம்பயக்கத்தானே செய்யும்!" என்று சொல்லிடத் தோன்றும், இந்தச் செய்தியைக் கேள்வியுறும் பலர்க்கு.

ரிகத்தைக் கற்பிக்கும் கருவியாகும். அது அடிமையை விடுதலைப்படுத்தியுள்ளது; நிர்வாணமாயிருந்தவர்களுக்கு உடை உடுத்தியுள்ளது; பசித்திருந்தவர்களுக்கு உணவு வழங்கியுள்ளது; வயதை நீடிக்கச்செய்துள்ளது; நமக்கு வீடுகளையும் குளிர்காயும் இடங்களையும் அளித்திருக்கிறது; படங்களையும் புத்தகங்களையும் தந்திருக்கிறது; கப்பல்களையும் நீராவி வண்டிகளையும் தந்திருக்கிறது; நிலவழித் தந்திகளையும் நீர்வழித் தந்திகளையும் கொடுத்திருக்கிறது; எண்ணற்ற உருளைகளை எப்பொழுதும் உருட்டிக்கொண்டிருக்கும் பொறிகளை அளித்திருக்கிறது; காட்டுமிராண்டியின் மூளையிலிருந்து உதித்த பயங்கரப் பிராணிகளையும், பேய்—பூதம்—பிசாசுகளையும், இறக்கை கொண்ட தேவதைகளையும் அழித்திருக்கிறது!

அறிவியல்தான், உண்மையான, உதவிபுரியக்கூடிய ஏதுவாகும். அதுதான் ஆணவத்தை அகற்றி நாணயத்தைப் புகுத்தும்; எல்லா மூட நம்பிக்கைகளையும் தள்ளிவிட்டு உண்மை பேசும் தன்மையைப் புகுத்தும். அது, பயன்படத்தக்கவைகள் எவை என்பதை மதத்திற்குச் சொல்லிக்கொடுக்கும். அது, அழுத்தமான மூடநம்பிக்கை எந்த உருவில் அமைந்திருந்தாலும், அதனை அழித்துவிடும். அது, சிந்தனையற்ற பக்திக்குமேல், சிந்தனையுள்ள ஐயப்பாட்டை வைக்கும். அது, புரோகிதர்கள்—மதவாதிகள்—மகான்கள் ஆகியோர்க்குப் பதிலாகத் தத்துவாசிரியர்கள்—சிந்தனையாளர்கள்—கற்றறிந்தவர்கள் ஆகியோரை நமக்கு அளித்திருக்கிறது. அது, வறுமையையும் குற்றத்தையும் அகற்றும்; எல்லாவற்றையும் விட சிறந்ததும், உயர்ந்ததும், மதிப்புவாய்ந்ததுமான செயல், அது உலகம் முழுமைக்கும் விடுதலை வழங்கும் என்பதேயாகும்!

(முடிவுற்றது)

அந்தச் சீர்திருத்தக்காரர்களுக்கும், புதிதாகத் தோன்றியுள்ள இந்த வியப்புக்குரிய சீர்திருத்தக்காரருக்கும் ஒரு வேற்றுமையுண்டு! அவர்களெல்லாம் தமிழின வரிவடிவு (எழுத்து வடிவம்) ஒன்றிலே சீர்திருத்தம் காண முயன்றனர்; ஆனால் இவர் தமிழின் ஒலி வடிவிலே (உச்சரிப்புவடிவம்) சீர்திருத்தம் காண முயலுகிறார்!

தமிழ், தமிழகத்தின் தட்பவெப்ப நிலை, அதிலுள்ள மக்களின் உடற்கூறுபாடு, நாக்குப் பிறழ்ச்சி, உச்சரிப்புத்தன்மை ஆகியவைகளுக்கு ஏற்ப இயற்கையோடு இயற்கையாய் வழிவழி வளர்ந்துவந்த நிலையில், அதிலுள்ள ஒலிகளைக் கூறுபடுத்திப் பார்க்கத் தொடங்கிய பண்டைத் தமிழ்ச் சான்றோர் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய் எழுத்துக்கள் பதினெட்டும் மூல ஒலிகளாக இருப்பதையும், உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து ஒலிக்கும்போது இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துக்களின் ஒலிகள் ஏற்படுவதையும் திட்டவட்டமாகத், தெளிவாகத், துணிவாகக் கண்டார்கள். உயிரெழுத்து பன்னிரண்டு, மெய்யெழுத்து பதினெட்டு என்ற அடிப்படையில் தான், தமிழ்மொழியும்; அந்த மொழியில் ஏற்பட்ட இலக்கியங்களும், அந்த இலக்கியங்களைக் கண்டு ஏற்பட்ட இலக்கணங்களும் வழிவழியாக வளர்ந்துவந்திருக்கின்றன. அந்த ஒலிகளின் அடிப்படையில் எத்தகைய சீர்திருத்தம் செய்தாலும், மாற்றம் ஏற்படுத்தினாலும், வளர்ந்து வந்துள்ள எழில்மிகுந்த தமிழ் மாடம் சரியக்கூடும், சிதறக்கூடும், உருத்தெரியாமல் போய்விடக்கூடும் என்பதை அறிந்துதான், பண்டைத் தமிழ் ஆன்றோரும், இற்றைக்காலத் தமிழ்ச் சான்றோரும் தமிழின் ஒலிவடிவினிடத்து நெருங்க அஞ்சி வாழ்ந்துவாலாயினர். ஆனால் அத்தகைய அச்சத்தை அறவே அகற்றிவிட்டுத் தமிழின் ஒலிவடிவிலே சீர்திருத்தம் செய்யத் துள்ளிக்குதிக்கிறார் தமிழர் என்ற பேர்படைத்த மனித உருவம் தாங்கியுள்ள ஒருவர்!

ஒலிவடிவை உணர்த்தும் வரிவடிவை எப்படி எழுதிக்காட்டினாலும், அதனால் ஒலிவடிவு எந்த வகையிலும் பாதிக்கப்படாது. 'ஆ' காரத்தை உணர்த்த 'அ' என்று எழுதிக்காட்டினாலும், 'அா' என்று எழுதிக்காட்டினாலும் வரிவடிவில் மாற்றம் ஏற்படுமேயொழிய, ஒலிவடிவில் ஒரு சிறிதும் மாற்றம் ஏற்படாது. அதுபோலவே 'லை', 'னை', 'ணை' ஆகியவற்றை 'லை', 'னை', 'ணை', என்று எழுதிக்காட்டுவதால் ஒலிவடிவில் ஒரு மாற்றமும் ஏற்படுவதில்லை. தமிழின் வரிவடிவை எப்படி எழுதக் கற்றுக்கொண்டால் எளிமையாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் இருக்கும் என்று கண்டறிந்து தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பு தொட்டு, அவ்வப்போது, தமிழின் வரிவடிவிலே சீர்திருத்தம் பல செய்துவந்தனர்; செய்து கொண்டு வருகின்றனர்; இனியும் செய்து கொண்டு வருவர். ஆனால் அவர்களெல்லாரும் ஒலிவடிவை மாற்றவோ, திருத்தம் செய்யவோ கிஞ்சிற்றும் எண்ணவில்லை. முடியாததால் அல்ல, செய்யக்கூடாது என்ற காரணத்தால். ஆனால் தமிழின் ஒலிவடிவையே மாற்றும் அளவுக்கு ஒருவருக்குத் தீரம் பிறந்திருப்பதுதான் எள்ளி நகையாடுதற்குரியதாக இருக்கிறது!

யார் அவர் என்று கேட்க ஆவல் தோன்றுகிறதல்லவா? அந்த வியப்புக்குரிய மனிதர் சாதாரணமானவரல்லர்; எதைப்பற்றியும் பேசும் தகுதி தமக்கு உண்டு என்று எண்ணிக் கொண்டிருக்கும் அமைச்சர் பிரிவைச் சேர்ந்தவர்தான்! மாநில அரசின் அமைச்சர்கூட அல்லர்; மத்திய அரசின் அமைச்சராவார்! அவர்தான் தோழர் அழகேசன் அல்ல, அல்ல, 'தோளர் அளகேசன்' ஆவார்! என்ன 'தோளர் அளகேசன்' என்று சொல்லப்படுகிறதே என்று பார்க்கிறீர்களா, அதுதான் அவர் செய்ய நினைக்கும் சீர்திருத்தம்! தமிழில் 'ழ'கரம், 'ள'கரம் என்று இரண்டு இருக்கவேண்டிய அவசியமில்லையாம்! 'ள'கரத்தை மட்டும் வைத்துக்கொண்டு 'ழ'கரத்தை ஒழித்துக்கட்டிவிடலாமாம்! 'ழ'கரம் வரவேண்டிய இடத்தில் 'ள'கரத்தைப் போட்டுக்கொள்ளலாமாம்! பொருள் மாறுபடுமே என்றால், இடம் நோக்கிப் பொருள் கொள்ளலாமாம்! இப்படிப்பட்ட சிலபல சீர்திருத்தங்களை வற்புறுத்தி, 'இப்படி செய்யலாமா பாருங்கள்" என்ற தலைப்பு இட்டு, டில்லி தமிழ்ச்சங்க வெளியீடான 'சுடரி'ல் கட்டுரை ஒன்று வரைந்துள்ளார் அன்பர் ஓ. வி. அழகேசன் அவர்கள்.

தமிழிலிருந்து அறவே எடுத்துவிடவேண்டும் என்று அவர் வற்புறுத்தும் எழுத்துக்கள், உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டும், மெய் எழுத்துக்களில் ங், ஞ், ழ் ற், ன்

என்ற ஐந்தும் ஆகும். இந்த ஏழு எழுத்துக்களையும், அவற்றோடு தொடர்பான எல்லா உயிர்மெய்யெழுத்துக்களையும் தமிழிலிருந்து அடியோடு விரட்டிவிடலாம் என்பது அன்பரின் 'ஆழ்ந்த சிந்தனையின் அரியமுடிவு!' தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழ்ப் பெருமக்களும் எந்த 'ழ'கரத்தையும் 'ற'கரத்தையும் தமிழுக்கே உரிய தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தவை என்று கூறிக் கூறிப் பெருமையையும் பூரிப்பும் கொள்ளுகிறார்களோ, அந்த எழுத்துக்களை அறவே நீக்கிவிடுவதன்மூலம், தமிழர்களின் பூரிப்பிலும் பெருமையிலும் மண்ணை அள்ளிக்கொட்ட விரும்புகிறார் 'தமிழ்மகன்' தோழர் அழகேசன்!

இந்த எழுத்துக்களையெல்லாம் போக்கிவிட்டால், அந்த எழுத்துக்கள் வரும் சொற்களை எப்படியெல்லாம் எழுதலாம் என்பதற்கு அவர் தரும் எடுத்துக்காட்டுகளைக் காண்பீராக:

கைகால், சைலம், தைமாதம், விபூதிப்பை, மைக்கண் என்ற சொற்களைக் கய்கால், சயிலம், தய்மாதம், வீபூதிப்பய், மய்க்கண் என்று வழங்கலாமாம்.

ஔஷதம், பௌருஷம், மௌவல், பௌவம், சௌகரியம், கௌதாரி என்ற சொற்களை அவுஷதம், பவுருஷம், மவ்வல், பவ்வம், சவுரியம், கவுதாரி என்று எழுதலாமாம்.

அறம் என்ற சொல்லை அரம் என்றே வழங்கலாமாம். இரண்டும் வெவ்வேறு பொருளுடையன என்றாலும், சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் கொள்ளலாமாம். வரை என்ற சொல் மலை, மூங்கில், அளவு என்று பல பொருளில் வருவதுபோல அரம் என்பதுபோன்ற சொற்களும் பல பொருளில் வரலாமாம். கற்கள், பற்கள், விற்கள் என்ற சொற்களைக் கல்கள், பல்கள், வில்கள் என்று சொல்லலாமாம். சற்று, பற்று, சுற்று போன்ற சொற்களைச் சர்ரு அல்லது சட்ரு, பர்ரு அல்லது பட்ரு, சுர்ரு அல்லது சுட்ரு என்று வழங்கலாமாம். திருக்குறள் என்பதைத் திருக்குரல் என்றும், முதல் குறளை "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதர்ரே உலகு" என்று எழுதலாமாம்.

வந்தான், போனான், கனவு, மனம், தனம், கனி, சுனை, வினா, பனுவல் போன்ற சொற்களை வந்தாந், போநாந், கநவு, மநம், தநம், கநி, சுநய், விநா, பநுவல் என்று எழுதலாமாம்.

வாழை, பழம், தமிழ், குமிழ், சிமிழ் போன்ற சொற்களை வாளய், பளம், தமிள், குமிள், சிமிள் என்று சொல்லலாமாம்.

'ங', 'ஞ' போன்ற எழுத்துக்களுக்கு வேலையே கிடையாதாம்; அவற்றை உபசாரத்துக்காகவே வைத்துக்கொண்டிருக்கிறோமாம்; அவை வெறும் பாரமாம்; அவை இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதானாம்! ஙமலி, ஞாழல், ஞெண்டு போன்ற சொற்களை நமலி, நாழல், நெண்டு என்று வழங்கலாமாம்.

கழகம், குடகு என்ற சொற்களில் வரும் 'க'வும், 'கு'வும் இடத்திற்கு ஏற்ப வெவ்வேறு ஒலியை எழுப்புவதால், அந்த இரண்டு ஒலிகளையும் குறிப்பதற்கு தேவநாகரியில் வெவ்வேறு எழுத்துக்கள் இருக்கின்றனவாம்; தமிழை தேவநாகரியில் எழுதும்போது அந்த இரண்டு எழுத்துக்களையும் இடத்திற்கு ஏற்ப எழுதலாமாம்!

மேலே எடுத்துக்காட்டியுள்ள எடுத்துக்காட்டுகள் அனைத்தும் 'ஆராய்ச்சித் திருமகனார்' தோழர் அழகேசனார் அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பனவைதாம்.

'ன', 'ண' என்ற இரண்டும், 'ல', 'ள' என்று இரண்டும் இருப்பதைத் தோழர் அழகேசன் அவர்கள் என்ன காரணத்தாலோ குறிப்பிடவில்லை; அவைகளிலும் ஏதேனும் ஒவ்வொன்றை வைத்துக்கொண்டு மற்றவற்றை அவர் ஒழித்துக்கட்டியிருக்கலாம்! எவ்வளவோ பாரம் குறைந்திருக்குமல்லவா? அவைபற்றிய ஆராய்ச்சிக்குறிப்புகளை வெளியிட மறந்துவிட்டாரோ அல்லது ஏடு இடங்கொடுக்கவில்லையோ அல்லது அடுத்து ஆராயப்படும் 'சரக்குகளாக' அவை இருக்குமோ என்னமோ, தெரியவில்லை!

'அ, ஆ', 'இ, ஈ', 'உ, ஊ', 'எ, ஏ', 'ஒ, ஓ' என்ற எழுத்துவகைகளிலும் இரண்டு இரண்டு இருப்பது தமிழுக்கு எவ்வளவோ பாரம் அல்லவா! அவைகளிலும் ஒவ்வொன்றை ஒழித்துக்கட்டிவிட்டு, ஒவ்வொன்றை மீதமாக்கித் தந்திருப்பாரேயானால், தோழர் அழகேசன் அவர்கள் தமிழின் பாரத்தைக் குறைப்பதில் எவ்வளவோ பேருதவி செய்தவராக எதிர்கால மக்களால் மிகவும் போற்றப்படுவாரல்லவா!? என்ன காரணத்தாலோ அந்தத் திருப்பணியையும் செய்ய இப்பொழுது தவறிவிட்டார்! இனிச் செய்வார் என்று எல்லோரும் எதிர்பார்ப்போமாக? இப்படிக்கொண்டால், 'அடு-ஆடு', 'இந்த-ஈந்த', 'உன்-ஊன்', 'எடு-ஏடு', 'ஒரு-ஓரு' என்ற சொற்களுக்கிடையே பொருள் வேறுபாடு தோன்றாமல் போகுமே என்று நீவிர் கேட்கலாம்; அதற்குத்தான்

அருமை அழகேசனார் வழி வகுத்துத் தந்துள்ளாரே, இடம் நோக்கிப் பொருள் கொள்ளலாம் என்று! பின் ஐயப்பாடு ஏன்?!

தமிழின் முதலெழுத்துக்கள் முப்பதில் ஏழு எழுத்துக்களை விரட்டியடிக்கும் (ஆராய்ச்சி வளரவளர இன்னும் சில எழுத்துக்களையும் விரட்டியடிக்கக்கூடும்) தோழர் அழகேசன் அவர்கள் எதிர்பார்க்கும் நன்மை என்ன? அவர் கூறும் காரணத்தை அவருடைய சொற்களாலேயே அறிமின்.

“நமது தேசத்து மக்களுடைய மனசிலே எழும் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் உள்ளபடி அறியவேண்டுமானால் இன்று நம் தேச பாஷைகளில் எழுதி வருவதைப் பார்க்கவேண்டும். ஆனால் ஒரு பாஷையை மற்ற பாஷைக்காரர்கள் அறியாத காரணத்தால். நாம் அதற்கு ஆங்கிலத்தின் துணையை நாடுகிறோம். ஆங்கிலத்தில் நமது மனம் மேலெழுந்தவாரியாகத் தெரிகிறதேயொழிய முழுவதும் தெரிவதில்லை. அதனால் நாம் ஒருவரை யொருவர் நன்றாக அறிந்துகொண்டு அன்பு பெருக ஒன்றுபட்டு வாழ்வது தடைப்படுகிறது.

“இன்று தமிழன் தமிழின் பெருமையையும், தெலுங்கன் தெலுங்கின் வளமையையும், ஹிந்திக்காரன் ஹிந்தியின் உயர்வையும் இவ்வாறே அந்தந்த பாஷைக்காரன் அந்தந்த பாஷையின் மகிமையையும் பேசுகிறான். இதுகூடப் பரவாயில்லை; ஒரு பாஷை பேசுவோன் இன்னொரு பாஷையில் ஒன்றுமில்லை என்று வேறு நினைக்கிறான். அவனுடைய அபிமானமும் அறியாமையுமே இதற்குக் காரணம். இது நீடிக்குமானால் நமது புதுவாழ்வு குந்தகம் அடையும். எப்படி நம் தேச க்ஷேமம் அபின்னமாக இருக்கிறதோ. அப்படியே நம்முடைய பாஷைகளின் முன்னேற்றம் ஒன்றை யொன்று தழுவி நிற்கிறது. உயர்வு தாழ்வு பேச்சுக்கு இடமின்றி எல்லாப் பாஷைகளையும் சேர்த்தே நாம் பார்க்கவேண்டும்.

“ஒரு தேசத்தின் வாழ்வுக்கும் உயர்வுக்கும் அதன் பாஷை கருவியாகவும் உறுதுணையாகவும் விளங்குகிறது. புராதன இந்தியாவின் ஆத்மீக வாழ்வுக்கும் அற்புத ரசனைக்கும் அதன் பாஷைகள் துணைபுரிந்தன. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளாக நமது வாழ்வு தேங்கிவிட்டது. நமது பாஷைகளும் தேங்கிவிட்டன. உலகத்தின் புதிய சிந்தனையிலும் சாதனையிலும் நாம் பூரணமாகக் கலந்துகொள்ளவேண்டுமானால் அதற்கு ஏற்ப நாம் நமது பாஷைகளை—சொற்களை—புதிதாகச் சமைத்துக்கொள்ள வேண்டும்.

“முதலில் நமது பாஷைகளை ஒரே எழுத்தில் எழுத ஆரம்பிக்கவேண்டும். இது உடனே ஆகிற காரியம் இல்லை. எல்லோரையும் எதிர்த்துக்கொண்டு இதைச் செய்யமுடியாது. சிறிது சிறிதாக இதற்கு எல்லோருடைய சம்மதத்தையும் ஆதரவையும் பெறவேண்டும்........

“இதை சாத்தியமாக்குவதற்கு நம் தேச பாஷைகளின் கனத்தைக் குறைத்து நடையை துரிதப்படுத்தவேண்டும். அதாவது அதன் எழுத்துவைப்பிலும் அமைப்பிலும் சில மாறுதல்கள் செய்யவேண்டும். மாறுதல்வேண்டும் என்ற ஆசையில் நான் இதைச் சொல்லவில்லை. அவசியத்தை முன்னிட்டே இதைச் சொல்லுகிறேன்”

என்பது தோழர் அழகேசன் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்திற்கான அடிப்படைக் காரணவிளக்கமாகும். “தமிழை தேவநாகரியில் எழுதும்போது அந்த இரண்டு எழுத்துக்களிலும் எழுதலாம்” என்று அவர் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

தோழர் அழகேசன் அவர்கள் கூற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் காணக்கிடைப்பது என்னவென்றால், இந்தியாவிலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் ஒரே வரிவடிவில் எழுதவேண்டும், அதுவும் தேவநாகரி வரிவடிவில் எழுதவேண்டும், தேவநாகரியில் எழுத முடியாத ‘ழ’, ‘ற’ போன்ற தமிழ் எழுத்துக்களையும், பிற ‘அவசியமற்ற’ தமிழ் எழுத்துக்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக வேறு ஒலிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம், பொருள் வேறுபாடு தோன்றினால் இடம் நோக்கிப் பொருள்கொள்ளலாம். எல்லா மொழிகளையும் ஒரே வரிவடிவில் எழுதினால் நாம் ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டு அன்பு பெருக, ஒன்றுபட்டு வாழமுடியும்,—அதற்கு ஏற்ப நாம் நமது மொழிகளை—சொற்களைப் புதிதாகச் சமைத்துக்கொள்ளவேண்டும், இதை சாத்தியமாக்குவதற்கு மொழிகளின் கனத்தைக் குறைத்து நடையைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதாகும்.

தோழர் அழகேசன் அவர்களது கூற்றுக்களை எத்தனை தடவைத் திருப்பித்திருப்பிப் படித்துப்பார்த்தாலும் கருத்துக்களிடையே தெளிவோ, தொடர்போ இருப்பதாகக் கண்டுகொள்ளமுடியாத வகையில், அறியாமை மிகப்பட்டு விளங்குவதைக் காணலாம்.

(தொடரும்)

கவிஞன் கை குலுக்கிய காவலன்

[illegible]
[எழினி]

செல்வக்கடுங்கோ வாழியாதன் சேரநாட்டை ஆண்ட சிறந்த மன்னர்களுள் ஒருவனாவான். அவனது காலம் சற்றுஏறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எனலாம். அவன் கல்வியறிவு, கொடைத்திறன், வென்றிச்சிறப்பு ஆகியவற்றில் மேம்பட்டு மிகு புகழ் எய்திச் சிறந்திருந்தான்.

செல்வக்கடுங்கோ வாழியாதன் சேரமான் கடுங்கோ வாழியாதன் என்றும் அழைக்கப் பெறுவதுண்டு. அவன் இருபத்தைந்து ஆண்டுகள் செங்கோலோச்சி வந்தான். அவன் தமிழார்வங்கொண்டு திகழ்ந்தவனாதலால், தமிழ்ப்புலவர்களை வரவேற்றுப், போற்றி, அவர்களது புலமைவிருந்து உண்டு, இறுமாந்திருப்பதிலே அவனுக்கு விருப்பம் மிக உண்டு. புலவர்களைப் போற்றி, அவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதிலே அவன் இன்பம் கண்டான். அதுபோலவே, புலவர்களும் அவனைப் புகழ்ந்து பாடி அவனிடம் பரிசுகள் பெறுவதிலே இன்பம் கண்டார்கள்.

கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்துபாடி, அவனுக்கு உற்ற நண்பர்களாக இருந்த புலவர்களிலே, கபிலர் தலையானவராவார். அவரிடத்தில் அவன் கொண்டிருந்த நட்பு அளவிடற்கரியது. அவனது வென்றிச் சிறப்பைக், கபிலர் பதிற்றுப்பத்திலுள்ள ஏழாம் பதிகத்தின் மூலம் மிகப்புகழ்ந்து பாடியுள்ளார். கபிலர் அந்தப் பதிகத்தைப் பாடியதற்காக, அரசன், அவருக்கு நூறாயிரங் காணம் பொன் கொடுத்ததோடல்லாமல், நன்றா என்னும் மலையின்மேல் ஏறிநின்று தன் கண்ணில் பட்ட அளவு நாட்டையும் கொடுத்தான். அந்த அளவுக்கு அவன் கபிலரிடத்தில் நன்றியறிவு உள்ளவனாக இருந்துவந்தான்.

அவர்கள் இருவரும் பழகும்போது நாடாளும் அரசன்—பாட்டுப் பாடும் புலவன் என்ற முறையில் பழகுவதில்லை; தோழமையுணர்ச்சியோடுதான் இருவரும் பழகிவந்தனர். அரசன், புலவரின் கைகளைப் பற்றிக், குலுக்கித், தன் அன்பையும் மகிழ்ச்சியையும் அவ்வப்போது வெளிப்படுத்திக்கொள்வது வழக்கம். ஒருநாள் புலவரின் கைகளைப்பற்றி மகிழ்ச்சியுற்றிருக்கும்போது, புலவரை ஒன்று கேட்கவேண்டும் போல் அரசனுக்குத் தோன்றியது. தன்னுடைய கை வன்மையாகவும், புலவரின் கை மென்மையாகவும் இருப்பதை அடிக்கடி உணர்ந்த அரசன், அதன் காரணத்தைப் புலவரிடத்திலேயே கேட்டறிய வேண்டும் என்று நீண்டகாலமாகவே எண்ணியிருந்துவந்தான். அதனைக் கேட்டறிவதற்கான வாய்ப்பும் நினைவும் அன்று ஏற்படவே, கேட்கத் துணிவு கொண்டான்.

“புலவரே! தங்களிடம் ஒன்று கேட்கவேண்டும் என்பது, எனது நீண்டநாளைய விருப்பம்!”

“என்னிடத்திலா, ஆதனே!”

“ஆமாம்!”

“அப்படி என்ன கேட்க விருப்பம்!”

“ஒன்றுமில்லை! என்னுடைய கையைவிடத் தங்களுடைய கை, ஏன் அவ்வளவு மென்மையாக இருக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும் என்ற ஆவல்தான்!”

“ஆதனே! உன்னுடைய கை ஏன் அவ்வளவு வன்மையாக இருக்கிறது என்பதை முதலில் சொல்லவா?”

“சொல்லுங்கள் பார்க்கலாம்!”

“பகைவரைக் கொன்றுகுவிக்கும் தன்மையுடையது உனது யானை. அது வலிவும் மிகவுடையது. அப்பேர்ப்பட்ட யானையைக்

கொண்டு பகைவர்களுடைய கோட்டைக் கதவங்களை உடைக்க எண்ணுகிறாய். கோட்டைக் கதவங்களைத் தாங்கி நிற்கும் கணைய மரம் முறிந்து விழும் அளவுக்கு உனது யானையைக் கொண்டு அதனோடு மோதவிட நீ துணிகிறாய். நீ இரும்பாற் செய்யப்பட்ட அங்குசத்தைக் கையிலேந்தி, யானையை முன்னே செலுத்தியும், பின்பு வேண்டுமளவு பின்னே இழுத்தும் அதனைத் தொழிற்படுத்துகிறாய். அப்படி அங்குசத்தை நீ அடிக்கடி ஏந்துகிற காரணத்தால் உன் கை வன்மையாக ஆகிவிட்டது. அதுமட்டுமல்லாமல், ஆழமான நீர் நிறைந்த பெரிய அகழியை உன் குதிரையைக் கொண்டு நீ தாண்ட எண்ணுகிறாய். அப்பொழுது மிக விரைவாகச் செல்லுகிற குதிரையை, அதன் கடிவாளக் கயிற்றால் இழுத்துப்பிடித்து மேற்செல்லவிடவேண்டியவனாக இருக்கிறாய். அதனால் உன் கை காழ்ப்பு ஏறியிருக்கிறது. இன்னமும் நீ அம்புறாத்தூணியை முதுகிற் போட்டுக்கொண்டு, கையிலே வில் ஏந்தி, தேர்மீது நின்று அடிக்கடிப் போர்க்களத்தில் போரிடுகிறாய். நீ வில்லினின்றும் அம்புகளைச் செலுத்தும்போதெல்லாம், வில்லின் நாண் உன்கையில் வடுக்களை உண்டாக்கிவிடுகிறது. அதனால் உன் கை மரத்துப்போயிருக்கிறது. இவையெல்லாவற்றோடுங்கூட, நீ பரிசிலர்க்கு, பெறுதற்கருமையான அணிகலன்களை ஓயாமல் அள்ளிக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறாய். அதன் காரணமாகவும் உன்கை வன்மையுடையதாக ஆகிவிட்டது. முழந்தாள் அளவுக்கு நீண்டிருக்கும் உனது பெரிய கைகள் இக்காரணங்களால்தான் வன்மையுடையதாகிவிட்டது!" என்று கபிலர் விளக்கம் கூறினார்.

அதைக்கேட்ட அரசன் சிரித்துக்கொண்டே, "சரி' என்கைதான் அப்படியாயிற்று! தங்கள் கை மென்மையாக இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"அதைப்பற்றி கேட்கிறாயா? புலால்நாற்றம் வீசும் கறித்துண்டுகளை நறுமணப்புகையில் வாட்டிச் சமைத்து அமைந்த ஊனையும், துவையலையும், கறியையும், சோற்றையும் உண்ணுதலாகியவருத்தந்தரும் தொழிலையல்லாமல், வேறு தொழிலை என்போன்ற பரிசிலர்கள் எவரும் செய்வதில்லை!" என்று கபிலர் கூறிக்கொண்டிருக்கும்போது, அரசன் சிரித்துவிடுகிறான். சிரித்துக்கொண்டே "புலவரே! ஏன் இப்படிக் கேலிமொழி பேசுகிறீர்கள்! என்னுடைய போர்த்தொழில் வருத்தந்தரும் தொழிலல்ல!- ஆனால் தங்களுடைய உண்ணுந்தொழில் மட்டும் வருத்தந்தரும் தொழில்! ஏன் இப்படி என்னை உயர்த்தித், தங்களைத் தாழ்த்திக் கூறிக் கொள்கிறீர்கள்? உங்களுடைய கூற்று எனக்குச் சிரிப்பைத்தான் தருகிறது!" என்று அரசன் கூறுகிறான்.

"ஆம் ஆதனே! சோறு பி[illegible]வதைத் தவிர வேறு தொழிலை, என் போன்ற புலவர்களின் கை அறியாதே! அதனால்தான் உன்னைப் பாடும் புலவர்களாகிய என்போன்றாரின் கை மிக மென்மையாக இருக்கிறது!" என்று கபிலர் மறுமொழி பகர்கிறார்.

கபிலர் மேலும் தொடர்ந்து சொல்லும் போது, "வாழியாதனே! நீ போர்க்களத்தில் எப்பொழுதும் வென்றிச் சிறப்போடு நின்று போராடும் வீரன் ஆவாய்! உன்னுடைய வலிய மார்பினை நெருங்கவேண்டுமென்ற விருப்பத்தால் பெண்டிர் மிக வருந்துகின்றனர்! ஆனால் பகைவர் உன் மார்பின் வலிமை கண்டு அதனை நெருங்க அஞ்சி வருந்துகின்றனர்! இப்படிப்பட்ட உன்னுடைய கை வன்மையோடு, எமது கை மென்மையை ஒப்பிட்டுப் பார்த்தால், இதைத்தவிர வேறு என்ன சொல்லமுடியும் ஆதனே!" என்று கூறி கபிலர் பூரித்துப்போய் நின்றார். அரசனும் புலவரின் புலமைத்திறனைக் கண்டு வியந்து உவகை பூத்து நின்றான்.

ஃ ஃ ஃ

இது புறநானூற்றிலுள்ள 14-வது பாட்டின் கருத்து. சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனின் வீரத்தை இப்பாட்டின்மூலம் அழகுபடத் தெளிவுபடுத்துகிறார் புலவர் பெருந்தகை கபிலர். சேரமானுக்கும் கபிலருக்கும் இருந்த நட்பு எவ்வளவு ஆழ்ந்து அகன்று உயர்ந்து விளங்கியது என்பதை இப்பாட்டின்மூலம் இனிது உணர்ந்துகொள்ளலாம். சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர் கைப் பற்றி "மெல்லியவாமால் நுங் கை" எனக் கபிலர் பாடியது என்பது இப்புறநானூற்றுப் பாடலின் அடியில் காணப்படும் விளக்கக் குறிப்பாகும். ஒருவரோடொருவர் அன்பைப் பரிமாறிக்கொள்ள அக்காலத்திலும் கைகுலுக்கிக் கொள்ளுவது [illegible]பாக இருந்துவந்திருக்கக்

கூடும் என்பது இப்பாடலின் வாயிலாக அறியக் கிடக்கின்றது.

"உம்முடைய கை மென்மையாக இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று வினவிய சேரமான் வாழியாதனுக்கு, மாற்றம் கூறவந்த கபிலர் "என் கை" என்று கூறுமல் "பாடுநர் கை" என்று குறிப்பிட்டார். இதனுல் சேரமானின் கைவண்மையை புலவர் உணர்த்தாமல் உணர்த்திஞர் என்பதாயிற்று. தம்முடைய கையின் மென்மைத்தன்மையைக் கூறவந்த புலவர் கபிலர், அரசனுடைய கைவன்மையையும், கைவண்மையையும் ஒருங்கே பாடுவதற்கு, ஏற்றதொரு வாய்ப்பாக, இப்பாடலை எடுத்துக் கொண்டார். கபிலர், தம்முடைய கை, சோற்றைப் பிசைந்து வாயில் ஊட்டி வருந்தும் தொழிலல்லாது, வேறு தொழில் எதனையும் அறியாது என்று கூறியது, அரசனுடைய கையின் பெருமையை மறைமுகமாக விளக்குவதற்காகும். கபிலர் ஊன் சோறு தின்னும் பழக்கங்கொண்டவர் என்பது இப்பாடலால் தெளிவாகத் தெரிகிறது. கபிலர் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர் என்று சிலர் கூறுவர். அதற்குக் காரணம் சங்கச் செய்யுட்களில் அவர் அந்தணர் என்று குறிக்கப்படுவதேயாகும். ஊன் சோற்றை ஒதுக்கிவிட்டு வாழும் பண்பு, சங்ககாலந்தொட்டே பார்ப்பன வகுப்பாரிடம் இருந்துவரும் பண்பாகும். கபிலர் ஊன்சோறு உண்ணும் பழக்கமுடையவர் என்று இப்பாடலால் உணர்த்தப்படுவதால், அவர் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவராக இருத்தற்கியலாது என்று எண்ண இடமிருக்கிறது. அவரது சான்றாண்மை குறித்து அவர் அந்தணர் என்று அழைக்கப்பட்டாரோ என்று எண்ணுவதற்கும் இடமுண்டு.

ஃ ஃ ஃ

கடுங்கண்ண கொல்களிற்ருல்
காப்புடைய எழுமுருக்கிப்
பொன்இயல் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிரப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க்(கு) அருங்கலம் நல்கவும் குரிசில்
வலிய ஆகு(ம்)நின் தாள்தோய் தடக்கை
புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ ஊன்துவை
கறிசோ றுண்டு வருந்துதொழில் அல்லது
பிறிதுதொழில் அறியா ஆகலின் நன்றும்
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்(கு)
ஆரணங்(கு) ஆகிய மார்பில் பொருநர்க்(கு)
இருநிலத்(து) அன்ன நோன்மைச்
செருமிகு சேஎய்நின் பாடுநர் கையே.

[புறநானூறு-14]

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர் கைப்பற்றி "மெல்லிய வாமால் நுங் கை" எனக், கபிலர் பாடியது

அண்டசராசரம்-4

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ர புவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும். அதையடுத்து 28 கோடி நரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம். அதற்குமேல் ஏழு பாதாளங்கள். அதையடுத்து ஆடகேசுரபுவனம். அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது......]

புவலோகம்

பூலோகத்தை அடுத்து மேலே இருப்பது புவலோகம்.

இந்தப் புவலோகத்தில், மேக மண்டலங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. இயற்கையமைப்பில் மேகமென்றால், நீராவியெழுதலால் உண்டாகி, பின் குளிர்ச்சிபட, பனித்துளிகளாக மாறி மழையாகப் பொழிகிறது என்பதாகும். ஆனால் புராணக்காரர்கள் தங்கள் கதைகளில், நீரைப்பொழிகின்ற மேகங்கள் மட்டுமல்ல, பொன், கல், மண் முதலியவற்றைக் கொட்டுகிற மேகங்களையும் படைத்திருக்கிறார்கள். புராண வர்ணனைப்படி, சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்று ஏழு மேகங்கள் இருக்கின்றனவாம். இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ இவற்றை எவ்விதக் கலப்புமின்றி கொட்டுமாம்.

மற்றும் சில புராணங்கள் அகண்டம், மூகம், சத்துவவகம், கௌஷம், மாருகம், பலகாம்யம், வைத்துதியம், விருஷ்டிவகம், குமோதம் என்று இப்படி வேறு வகைகளிலும் மேகங்களைப் பிரிக்கின்றன. இந்தப் புராணங்களின் அளவுப்படி (அல்லது "அளப்புப்படி") இந்த மேகங்கள் 80,000மைலுக்குமேல் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன.

இந்த மேகமண்டலங்களுக்குமேல், அமோகமென்கிற வாயுவின்மேல் ஒரு பட்டணம் இருக்கிறதாம். அந்தப் பட்டணத்தில் 30,000 விநாயகர்கள் உட்கார்ந்து, பூலோகத்தில் செய்யப்படும் பூசைகளை ஏற்றுக்கொள்ளுகிறார்களாம்.

இந்த விநாயகர்களின் பட்டிணத்தின்மேல் வீரதேவதைகள் வசிக்கின்றன. பூலோகத்தில் வீரர்கள் செய்கிற பூசைகள் இந்த தேவதைகளை அடைகின்றனவாம்.

வீர தேவதைகளுக்கு மேல் வீர சுவர்க்கம் இருக்கின்றது. வீரத்துடன் இருந்து, களத்

[கடுங்கண் - வன்கண்மை. வலிமை; கொல்களிறு - கொல்லுந்தொழிலையுடைய யானை; காப்பு - காவல்; எழு - கணையமரம்; கோட்டைக் கதவங்களுக்குப் போடப்படும் தாழ்பாள் கட்டை; பொன் - இரும்பு; புனை - அழகு செய்யப்பட்ட; தோட்டி - அங்குசம்; முன்புதுரந்து - முன்னர்க்கடாவி; சமம் - வேண்டும் அளவு; பார் - குந்தாலி; நீரழுவஞ்சிவப்பு - நீர்ப்பரப்பினது ஆழமாகிய உயர்ச்சியை; நிமிர்பரிய - மிகைத்தவேகத்தினையுடைய; மா - குதிரையை, ஆவம் - அம்புறுத்தூணி; புறத்தை - முதுகினையுடையாய்; தேர்மிசை - தேர்மேலே; சாவநோன்ஞாண் - வில்லினது வலிய நாண்; வழங்கவும் - அம்பைச் செலுத்தவும்; அருங்கலம் - அரிய அணிகலம்; குரிசில் - தலைவனே; கொளீஇ - கொளுத்தி; நல்லவர்க்கு - பெண்டிர்க்கு; பொருநர் - பகைவர்; இருநிலம் - பெரிய நிலம்; அன்ன - போன்ற; நோன்மை - வலியினையுடைய; செருமிகுசேஎய் - போரின்கண்ணே மிக்க கட்டிளங்காளை; பாடுநர் - பாடும்புலவர்கள்; அதாவது பரிசிலர்கள்.]

தில் மாள்பவர்கள் இந்த இடத்துக்குத்தான் நேராக வருகிறார்களாம்.

வீரசுவர்க்கத்தின்மேல் சித்தர்கள் மேகாசிரயம் என்ற பட்டணத்தில் இருக்கிறார்கள்.

இதற்கப்பால் இந்திரனுடைய ஐராவதம் ஒரு உலகத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது.

அதற்குமேலுள்ள உலகத்தில் கருடன் வசித்துக்கொண்டிருக்கின்றான்.

கருடனுடைய உலகத்துக்குமேல், தேவகங்காசலம் என்கிற தேவகங்கையின் இடம் சுமார் 50 கோடி மைல் பரந்து இருக்கிறது.

தேவகங்காசலத்துக்குமேல் பத்துலட்சம் மைல் தூரத்தில் தேவகணங்களும் அதற்கு மேல் தட்சப்பிரசாபதிகள் என்ற தேவகுமாரர்களும் இருக்கின்றனர். இவைகளுக்குமேல் சூரியலோகம் ஆரம்பிக்கிறது.

சூரியலோகம்

சூரியனைப்பற்றிப் புராணங்களில் வெவ்வேறு விதமாக வர்ணனைகள் தரப்படுகின்றன.

ஒரு புராணத்தில், சூரியன் ஒரு முகம், எட்டுக்கைகள், அந்தக் கைகளில் இரண்டு தாமரை பூ, தூபம் மணி, கமண்டலம், அபயம், வரதம், ஜபமாலை இவைகளுடன் பொன்னுலான பட்டையும், பொன்னாபரணத்தையும் பூண்டவர் என்று கூறப்படுகிறது.

மற்றொரு புராணம் அவர் ஒருமுகம், இரண்டுதோள், இரண்டுகண்கள், வெண்தாமரைப் பூவிலிருப்பவர், தாழம்பு நிறமுடையவர் என்று குறிக்கிறது.

சிவபுராணங்கள், சூரியன் சிவமூர்த்தியின் அம்சமென்றும், அதனால் சூரியனைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் சிவசூரியர் என்றே குறிப்பிடுகின்றன. அந்தப் புராணங்களின்படி, சூரியனுக்கு; நான்கு முகங்கள், எட்டுத் தோள்களாகும்!

இப்படி சூரியனுடைய உருவவர்ணனையே புராணத்துக்குப் புராணம் மாறுகிறது. ஒரு புராணம் ஒரு முகமென்றால், மற்றொரு புராணம் நான்கு முகங்களாக ஆக்கிவிடுகிறது.

புராணங்களின் வர்ணனைப்படி சூரியன் ஒற்றைக்கால் தேரில் ஏறிவருகிறான். தேரின் உயரம் 9 லட்சம் மைல், பார் நீளம் 12 லட்சம் மைல். அந்தத் தேரினுடைய இரிசின் ஒரு முனை மேரு மலையின் உச்சியிலும், மற்றொரு முனை மானசோத்திரம் என்ற மலையின் உச்சியிலும் படிந்திருக்கின்றன. சூரியனுடைய தேரை ஏழு குதிரைகள் இழுத்துவருகின்றன.

இவ்வாறு பவனி வருகிற சூரியனைச் சுற்றி ஏராளமாக எடுபிடி ஆட்களும் வருவார்கள். முதலில், வசிஷ்டர், கௌதமர், ஜமதக்னி, பாரத்துவாசர் போன்ற ரிஷிசிரேஷ்டர்கள் மாதத்துக்கொருவராக வந்து, சூரியனை நோக்கி தோத்திரம் செய்வார்கள். நாரதன், காந்தாரு, தும்புரு போன்றவர்கள் மாதத்துக்கொருவராக சூரியனுடைய தேர்முன் நடந்து பாடிக்கொண்டு வருவார்கள். ஊர்வசி, ரம்பை, திலோத்தமை போன்றவர்கள் தேர்முன் ஆடிக்கொண்டு வருவார்கள். இவர்களேயல்லாமல், தேரையிழுத்துப்போக வாசுகிபோன்ற பெரும் பாம்புகளும் (வடக்கயிறுபோல), காவல்புரிந்து வர அசுரர் கூட்டமும் சூரியனுடைய தேரைச் சூழ்ந்துவரும். சூரியனுடைய தேர் மேருவிற்கு இடது பக்கத்திலிருக்கும் இந்திர பட்டணத்திலிருந்து கிளம்பி, யமன் பட்டணத்தை அடைந்து, பிறகு வருணன் பட்டணத்தைத் தாண்டி, சோமன்பட்டணத்தை யடைந்து, மீண்டும் இந்திர பட்டணத்தைச் சேர்கிறது.

இவ்வளவு ஆடம்பரங்களுடன், வசிட்டர் புகழ, நாரதர் பாட, ஊர்வசி ஆட வருகிற சூரியன், சர்வ பராக்கிரமசாலி யென்றபோதிலும், உதயமாகிற நேரத்தில் அவனாலும் தாண்டமுடியாத விதத்தில் ஒருவிதத் தடை உண்டாகிறதாம். மந்தேகர் என்ற அசுரர்கள் ஒரு காலத்தில் பிரமதேவனை நோக்கிக் கடுந்தவம் செய்து, வரம்பல பெற்று, வலிவு அடைந்தார்களாம். அந்தப் பலத்தைக் கொண்டு, நாள்தோறும் சூரியனை உதய நேரத்தில் வராமல் தடுத்துவிடுவார்களாம். தேவர் கோமான் திகைத்துப்போய் ஒற்றைக்கால்தேரை சற்று நிறுத்திக்கொண்டுவிடுவார். மந்தேகர் வழி மறித்திருப்பதை மீறமுடியாமல், வசிட்டரும், நாரதரும், காந்தருவரும், கலங்கி நிற்பார்கள். அந்தச்சமயத்தில், எங்கிருந்தோ மாயமாக அம்புகள் பறந்துவந்து மந்தேகர்களைத் தாக்கி, அவர்களைக் கொன்று, வழியை விலக்கி, சூரியனுடைய தேருக்கு வழிதரும். பின் நின்றிருந்த

ஆடல், பாடல் எல்லாம் மீண்டும் ஒலிக்க, சூரியனுடைய பயணம் ஆரம்பிக்கும்.

உதய சூரியனை வழிமறித்தவர்கள்மீது பாய்ந்த மாய அம்புகள் எங்கிருந்து வந்தன வென்று பார்த்தால், பூலோகத்தில் முனிபுங்கவர்களும், பிராமண சிரேஷ்டவர்களும் உதய நேரத்தில் செய்கிற காயத்திரி என்ற ஜெபம், மாயக் கணைகளாக மாறி சூரியனுடைய உதவிக்குப் போகின்றன. இப்பொழுதாவது புரிகிறதா, காலையில் குளத்தங்கரையிலும், ஆற்றோரத்திலும் அதிகாலையில் வேதியர் குலத்தவர்கள் காயத்திரி செய்வதன் பலன், செய்யவேண்டிய தன் அவசியம்! அவர்கள் காயத்திரி ஜபிக்காவிட்டால், மாய அம்புகள் கிளம்பா; மாய அம்புகள் வராவிட்டால் மந்தேகர்கள் மாய மாட்டார்கள்; மந்தேகர் அழியாவிட்டால் சூரியனால் முன்னேறி வரமுடியாது; சூரியன் வரவில்லையென்றால், அன்று பகல் முழுவதும் இருட்டாகவே இருக்கும். காயத்திரி ஜபித்தால் தான் சூரியன் உதயமாகமுடியும், அந்தக் காயத்திரியை, பிராமண குலத்தவர்கள் மட்டுமே ஜபிக்கமுடியும். எனவே பிராமண குலத்தவர்களின் உதவி இல்லாவிட்டால் சூரியன் உதிக்காது, பகல் கிடையாது! பார்த்தீர்களா பிராமணகுலத்தவர்களின் சக்தி இந்த உலகத்தில் உள்ளவர்களை மட்டுமல்ல, சூரியமண்டலத்திலுள்ள சூரிய தேவனையே ஆட்டிவைக்கிறது!

சூரியனுக்கு மொத்தம் 1000 கதிர்கள் இருக்கிறதாம். அவற்றில் 400 கதிர்கள் நேராக மழையைத்தருமாம், 300 கதிர்கள் மழை வளத்தை உண்டாக்கும், 300 கதிர்கள் பனியைத் தரும்.

சில புராணங்களில், பன்னிரண்டு சூரியர்கள்—ஒவ்வொரு மாதத்துக்கு ஒவ்வொருவராக—கூறப்படுகின்றனர்.

சூரியனுடைய குலத்தைப் பார்த்தால், அவனுக்கு வேடிக்கையான அண்ணன்தம்பியர்கள் இருக்கிறார்கள். பிரம்மாவின் உடலிலிருந்து உண்டானவர் அரிசி முனிவர் என்பவர். அரிசி முனிவருடைய குமாரர் காசிபர். காசிபருக்கு பதிமூன்று மனைவிமார்களாம். முதல் மனைவியின் மகனே சூரியன். மற்ற மனைவியரிடத்தில் பிறந்தவர்கள்—தைத்திரியர், தானவர், சித்தர், காந்தருவர், அப்சரசுக்கள், அரக்கர்கள், மரம், செடி கொடி பூண்டுகள், புலி, சிங்கம், கழுதை, குதிரை, பட்சிகள், கருடன், பாம்பு முதலியன வாகும். காசிபரின் தேவியர்கள், சூரியன் போன்ற தேவர்களை மட்டுமல்ல, கழுதை குதிரை, சிங்கம், புலி போன்ற மிருகங்களைக் கூட குழந்தைகளாகப் பெற்றிருக்கிறார்கள். பெற்றோர்கள் கழுதை, குதிரை, புலியாயிருந்தாலன்றி, குழந்தைகள் கழுதை குதிரை, புலிகளாக இருக்கவேண்டிய நியாயமில்லை. அதைவிட அதிசயமானது, மரம் செடி கொடி முதலியவைகளையும் அவர்கள் பெற்றெடுத்தார்களாம்! இவ்வளவு விநோதப் பிறவிகளும் சூரியனுடைய சகோதரர்கள்!

கடவுள் என்றால், ஏதாவது காமக்கதைகள் இல்லாமலிருக்காது. சூரியனுக்கும் அதேபோல் பல இருக்கின்றன. துவட்டா என்ற பெண்குதிரை உருக்கொண்டு இமயமலைச் சாரலில் உலவிக்கொண்டிருந்தாளாம். அவளைக் கண்டு, மோகங்கொண்ட சூரியன் தானும் ஒரு ஆண் குதிரை உருக்கொண்டு, அவளைத்தேடி ஓடிவந்தானும். காமப்பரவசத்துடன் வேகமாக ஓடிவந்ததால், காமம் தலைக்கேறி, மூக்கின்வழி ஒழுகி, கீழே சிதறி, அதிலிருந்து அசுவனி தேவர்கள் உண்டானார்களாம். இது மிகவும் சுருக்கமாகச்சொல்லப்பட்ட சம்பவம். இந்தக் கதை பிரமபுராணத்திலிருக்கிறது. இதைப்போன்ற ஆபாசக் கதைகள் மற்றும் சில வேறு புராணங்களிலும் சூரியனைப்பற்றிக் கூறப்படுகின்றன.

புராண "அளப்புப்படி" சூரியலோகம், 1 கோடி 30 லட்சம் மைல் நீளமும், 27 லட்சம் மைல் அகலமும், 99 லட்சம் மைல் உயரமும் உள்ளது. இந்தச் சூரியலோகத்தை காயத்ரி ஜபித்தவர்கள் அடைவார்கள் என்று புராணம் கூறுகிறது. அதாவது காயத்ரி ஜபிக்கிற பிராமணர்கள் மட்டுமே—மற்ற வகுப்பினர் காயத்திரி ஜபிக்க அருகதையற்றவர்கள், ஆதலால் பிராமணர்கள் மட்டுமே—சூரியலோகத்தில் இடம் பிடிக்கமுடியும். சென்னையில் சில இடங்களில் "பிராமணர்களுக்கு மட்டும்" என்றும் காலி வீடுக்கு பலகைக் கட்டுவதுபோல, சூரியலோகத்தில் "பிராமணர்களுக்கு மட்டும்" என்று இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது.

(தொடரும்)

'மன்றம்' விற்பனையாளர் தேவை

காஞ்சிபுரத்திற்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

விவரங்கட்கு எழுதவும்.

நிர்வாகி.

வினாவும் விளக்கமும்

சேக்கிழார்

திரு. சி. என். அண்ணாத்துரை அவர்களுக்கு அறிஞர் என்ற பட்டம் எப்பொழுது யாரால் கொடுக்கப்பட்டது?

பட்டங்களில் இருவகை உண்டு. ஒருவகைப் பட்டங்கள் பட்டத்திற்குரியவர்களால் வாங்கப் பெற்று நாட்டில் வழங்கப்பெறும்; மற்றொரு வகைப் பட்டங்கள் பட்டத்திற்குரியவர்களைத் தாமே சென்றடைந்து நாட்டில் வழங்கப் பெறும். அறிஞர் அண்ணாத்துரை அவர்களுக்கு அமைந்துள்ள 'அறிஞர்' என்ற பட்டம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது.

வெள்ளித்தகட்டிலோ, செப்புப் பட்டயத்திலோ, பொன் பதக்கத்திலோ, கேடயத்திலோ, கோப்பையிலோ, சான்றுத்தாள்களிலோ, பட்டங்கள் குறிக்கப்பட்டு சில குறிப்பிட்ட விழா நிகழ்ச்சிகளின் மூலம் சிலருக்குச் சிலவகைப் பட்டங்கள் வழங்கப்பெறும். விழா நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அந்தந்த பட்டங்களுக்குரியோர், அந்தந்த பட்டங்களால் அழைக்கப்பெறுவர். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அமைந்திருக்கும் 'அறிஞர்' என்ற பட்டம் அவ்வகையைச் சார்ந்ததல்ல. அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சிலும் எழுத்திலும் திளைத்து, அவரது அறிவாற்றல் மேம்பாட்டுத் திறனைக் கண்டு வியந்து, உவகையால் பொங்கி எழுந்த ஆயிரமாயிரம் உள்ளங்களிலிருந்து அன்புவடிவாய் வெளிக்கிளம்பிய அரிய பாராட்டுச் சொல்தான் அறிஞர் என்பது. இன்ன இடத்தில் இன்னாரால் முதன் முதலாகச் சொல்லப்பட்டது என்று கண்டறிந்துகொள்ள முடியாத வகையில், அவரது அறிவாற்றல் திறனைக் கண்டறிந்துகொண்ட எல்லோராலும் ஒருமித்து எழுப்பப்பட்ட ஒரு பெரும் உவகைச் சொல்தான் 'அறிஞர்' என்பது. 'மகாத்மா' என்றால் அது எப்படிக் காந்தியாரைக் குறிக்கிறதோ, 'பெரியார்' என்றால் அது எப்படி ஈ. வெ. ராமசாமியாரைக் குறிக்கிறதோ, அவ்வாறே 'அறிஞர்' என்றால் அது அண்ணாத்துரையைத்தான் குறிக்கும் என்ற நிலை நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

அறிஞர் அண்ணாவின் அறிவு ஆற்றலில் மதிப்புக்கொண்டோர் அவரை 'அறிஞர்' என்று அழைப்பதிலே மகிழ்ச்சி கொள்கிறார்கள். அண்ணா அவர்கள் 'அறிஞர்' என்று அழைக்கப்படுவதுகண்டு, மாற்றாரிற் சிலர் பொறாமைப் படுகிறார்கள், பொச்சரிப்புக் கொள்கிறார்கள்! அவர்தம் நிலை கண்டு நாம் இரங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அண்ணாவை 'அறிஞர்' என்று ஆதரிப்பாளர்கள் அழைப்பது, மாற்றாரை எந்தவகையிலும் கட்டுப்படுத்துவதாகாதே! தகுதிக்கேற்றபடி, பழக்கவழக்க பண்புக்கேற்றபடி அண்ணா அவர்களை அழைப்பதை யாரும் தடுத்து நிறுத்தவில்லையே! அப்படியிருந்தும் பொறாமைப்படுகிறார்கள்—பொச்செரிப்புக்கொள்கிறார்கள் சிலர் என்றால், அவர்களின் சிறுமைப் பண்பைப்பற்றி என்னவென்பது! "அண்ணாத்துரைக்கு அறிஞர் என்ற பட்டம் யார் கொடுத்தது?" என்று ஓயாமல் கேட்டுத் தம் நெஞ்சைப் புண்ணாக்கிக் கொள்வதோடு நில்லாமல், தம் பேதைமையை புலப்படுத்திக்கொள்ளவும் செய்கிறார்கள் சிலர்! அறிஞர் அண்ணாவை 'அறிஞர்' என்றே அழைக்கவேண்டும் என்று அவர்கள் எல்லோராலும் வற்புறுத்தப்பட்டால், அப்பொழுது அவர்கள் அப்படிக் கேட்பதிலே நேர்மை இருக்க முடியும்! அப்படியொன்றும் இல்லையே! அண்ணாவை மதிப்போர் அவரை அன்பின் காரணமாக 'அறிஞர்' என்று அழைக்கிறார்களென்றால், ஏனையோர், அது, தம்மைக் குத்துவதாகக் கொள்வானேன்; குடைவதாகக் கதறுவானேன்? தாம் எப்படிப்பட்ட இழிமக்கள் என்பதை அவர்கள் அவ்வகையில் காட்டிக்கொள்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன கருதமுடியும்!

இத்துணைக்கும் அறிஞர் அண்ணா அவர்கள், தம்மைப் பிறர் அறிஞர் என்று அழைப்பதற்காக மகிழ்ந்துவிடுவதோ, அப்படி அழைக்காமற்போவதற்காக வருத்தப்படுவதோ இல்லை. தம்மை என்ன அடைமொழி போட்டுப் பிறர் அழைக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர் கவலைகொள்வதேயில்லை.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு 'அறிஞர்' என்ற பட்டம்—அல்ல, அல்ல, அன்பு அடை

மொழி அவரால் தேடிக்கொள்ளப்பட்டது மல்ல, அவருக்கு யாராலும் கொடுக்கப்பட்டது மல்ல, இயல்பாக அவரை வந்து சார்ந்ததாகும் என்பதை அறியாதார் அறிவார்களாக!

ஃ ஃ ஃ

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ரோமாபுரி ராணிகள்' என்ற நூலும் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய 'வாழமுடியாதவர்கள்' என்ற கதையும் தமிழக மக்களுக்குச் சீர்திருத்தம் ஊட்டத் தோன்றியவைகளாகுமா?

இப்படிப்பட்ட கருத்தமைந்த கேள்வியை மிகக் கீழ்த்தரமான சொற்களால் கேட்பதன் மூலம் தங்கள் அறியாமையை வெளிப்படுத்தி வருகிறார்கள் சிலர்.

மக்களுக்கு நீதியையும், சீர்திருத்தத்தையும் புகட்டும் உலகப் பேரறிஞர்கள் இரண்டு முறை யைப் பொதுவாகக் கையாளுவார்கள். 'செய்யத்தகுந்தவை' இவை என்று சொல்லித் திருத்தும் முறை ஒன்று; 'செய்யத்தகாதவை' இவை என்று சொல்லித் திருத்தும் முறை மற்றொன்று. 'ரோமாபுரி ராணிகள்'—'வாழ முடியாதவர்கள்' ஆகிய இரண்டும், சீர்திருத்தம் செய்வதில் இந்த இரண்டாவது முறையைச் சார்ந்ததாகும்.

வாழ்ந்து வளர்ந்திருந்த ரோமாபுரிப் பேரரசு மிகவிரைவில் வீழ்ச்சியுற்றதற்கு, அந்த நாட்டு அரசிகள் காமக்களியாட்டத்தில் மூழ்கியிருந்தது எப்படிக் காரணமாகும் என்ற வரலாற்று உண்மையை உலகுக்குக் காட்டவே தான் அறிஞர் அண்ணா அவர்கள் 'ரோமாபுரி ராணிகள்' பற்றிய நூலைத் தீட்டினார்கள். கிப்பன் என்ற மேலை நாட்டு வரலாற்று அறிஞன் எழுதிய "ரோமப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்பதுபோன்ற வரலாற்று நூல் களை அடிப்படையாகக் கொண்டுதான் அறிஞர் அண்ணா அவர்கள் ரோமாபுரி ராணிகளைப் பற்றிச் சுட்டிக்காட்டும் இடங்களிலெல்லாம் வெறுப்புணர்ச்சி காட்டும் சொற்களால் சுட்டிக்காட்டுகிறாரே யல்லாமல், எந்த இடத்திலும் போற்றிப் புகழ்கிறாரில்லையே! அவர்களைப் போற்றிப் புகழ்வதில்லையே அண்ணாவின் நோக்கம். இந்த உண்மையை அந்த நூலை நன்கு படித்தவர்கள் மட்டுந்தான் உய்த்துணர முடியுமேயல்லாமல், அந்த நூலைப் படிக்காமல் உளறிக் கொட்டுபவர்கள் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? தமிழ்நாட்டுப் பெண்கள் ரோமாபுரி ராணிகளைப்போல் வாழவேண்டும் என்று எந்த இடத்திலாவது கூறுகிறாரா? அல்லது குறிப்பாலாவது உணர்த்துகிறாரா? முதலிலிருந்து கடைசி வரையில், எப்படிப் பட்ட வெறுக்கத்தக்க செயல்களை ரோமாபுரி ராணிகள் செய்து வந்தார்கள் என்பதைத்தான் அண்ணா அவர்கள் உணர்த்துகிறார்களே யொழிய, அத்தகைய செயல்கள் கடைபிடித் தொழுகவேண்டிய சீரிய செயல்கள் என்று செப்புகிறார்? இல்லையே! 'ரோமாபுரி ராணி கள்' என்ற நூலின் நோக்கம், ரோமாபுரி ராணி களின் வரலாறுகளிலிருந்து உலகம் பாடம் பெறவேண்டும் என்பதே யொழிய, அவற்றைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதல்லவே! இந்தச் சாதாரண உண்மையைக்கூட புரிந்து கொள்ளமுடியாத நிலையில், உளறிக்கொட்டித் தம் பேதைமையைச் சிலர் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

பிரம்மா தான் பெற்றெடுத்த பெண்ணையே கற்பழிக்கும் புராணப்படமாகிய 'திலோத் தமை' என்ற படத்தைப் பார்த்துவிட்டு, அந் தப் புராணக்கருத்திலே ஒன்றிப்போன ஒரு தந்தையும், மகளும் அதே நிலைக்கு எப்படி ஆளாகின்றார்கள் என்பதைக் கதையாகத் தீட்டிக் காட்டி, அதன் மூலம், அத்தகைய இழிசெயலை உணரவும் அதனை வெறுக்கச் செய்யவும் ஆன மனவுணர்ச்சியை மக்களிடத்தே பரப்பவேண் டும் என்பது மட்டுமல்லாமல், புராணக்கருத்து எந்த அளவுக்கு இழிவான முறையில் மக்கள் உள்ளத்தைக் கொள்ளைகொள்கிறது என் பதைச் சுட்டிக்காட்டவும் கலைஞர் கருணாநிதி ஒரு சொல்லோவியம் தீட்டினார்கள். அது 'வாழமுடியாதவர்கள்' என்ற பெயரில் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புராணக் கருத்து எந்த அளவுக்குத் தாழ்ந்த நிலைக்கு மக்களை இழுத்துச்செல்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இழிவான புராணக் கருத்தை வெறுக்கும்படிச் செய்கிறார் கலைஞர் கருணாநிதி. இது 'செய்தக்க அல்ல' என்ற வகையில் போதிக்க வந்த சீர்திருத்தம்தான். தமிழ்நாட்டுப் பெண்கள் எல்லோரும் 'வாழ முடியாதவள்' போல வாழக்கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தி, அவளுடைய செயலைப் போற்றிப் புகழவாச் செய்கிறார் நண் பர் கருணாநிதி? இல்லையே!

'ரோமாபுரி ராணிகள்'-'வாழமுடியாதவர்கள்' ஆகிய இரண்டும் எழுதப்பட்டதின் அடிப்படை

நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்திருக்கவேண்டாமா. கேள்வி எழுப்புவோர்? அவை இரண்டும் 'செய்தக்க அல்ல' என்ற முறையில் சீர்திருத்தத்தைப் புகுத்த தோன்றியவையாகும் என்பதை இனியேனும் அத்தகையோர் உணர்வார்களாக! இந்த உண்மையை உணர்ந்துகொள்ள முடியாமல், சிலர் மனிதர் என்ற பேர்கொண்டு நடமாடுகிறார்களே என்பதற்காக நாம் இரங்கத்தான் வேண்டியிருக்கிறது!

ஃ ஃ ஃ

அடுத்துவரும் இரண்டாவது பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட, பெரியார் இராமசாமி அவர்களின் இசைவை, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் எதிர்பார்ப்பது ஏன்?

1952-ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலுக்குச் சிலதிங்கள்களுக்கு முன்னால், மதுரையில் கூடிய திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், அப்போதிருந்த சூழ்நிலைகளை ஆராய்ந்து, முதல் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நேரடி பங்கு கொள்வதில்லை என்றும், தி. மு. கழகம் முன்வைக்கும் திராவிடநாடு பிரிவினை உடன்படிக்கைத் தாளில் தேர்தலில் போட்டியிடுபவர்களில் யார்யார் கையொப்பமிடுகிறார்களோ, அவர்களில் யார் யாரை அந்தந்த மாவட்டக் கழகங்கள் தேர்ந்தெடுக்கின்றனவோ, அவர்களுக்குக் கழகம் தனது ஆதரவைத் தரும் என்றும் முடிவுசெய்தது. தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்றவர்களில் பலர் வெற்றிபெற்றார்கள் என்ற நிலை கழகத்துக்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளித்தது.

வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் போக்கையும், நடவடிக்கைகளையும் நன்கு கூர்ந்து கவனித்த கழகப்பற்றுடையோரும், கழகத்திடத்துப் பரிவுகாட்டுவோரும் ஏதிலாரைச் (கழகத்துக்கு அயலாரை) சட்டமன்றத்திற்கு அனுப்புவதைவிடக், கொள்கை வைரம் பாய்ந்த உள்ளங்களைப் படைத்த கழகத்தோழர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால், கழகக் கருத்துக்களை அரசியலார் நேரிடையாகக் கேட்குப்படி செய்வதோடு, கழகக் கொள்கைகளுக்கு நல்ல ஆக்கந்தேடவும் வழி ஏற்படும் என்ற ஆவலை, இப்பொழுது ஆங்காங்கு வெளிப்படுத்திவருகின்றனர். அத்தகையோரின் ஆவலை அறிந்தும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்துவோர், அதிலுள்ள ஆபத்தையும் உணரவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிவருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிட வேண்டுமானால், அதற்கான நல்ல சூழ்நிலை உருவாக வேண்டும் என்று பொதுச் செயலாளர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடக் கழகமும் நேரடி மோதுதலுக்கு ஆளாகாமல் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படியிருந்தால் நல்லது என்று எண்ணுகிறார்கள். திராவிடக் கழகத்தின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், எதிர்ப்பு இல்லாமலிருந்தால் நல்லது என்பதிலே அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். பொதுச் செயலாளர் அவர்கள், தாம் விரும்பும் விருப்பமும், எண்ணும் எண்ணமும், கொள்ளும் அக்கறையும் வெற்றிபெற்றால் நல்ல சூழ்நிலை உருவாவதற்குக் காரணமாகுமே என்று எதிர்பார்க்கிறார்கள். எனவேதான் திராவிடக்கழகத் தலைவர் பெரியார் இராமசாமியின் இசைவு இருந்தால் நல்லது என்ற கருத்தை அடிக்கடி வெளியிட்டு வருகிறார்கள்.

அடுத்து வரும் இரண்டாவது பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுவதா, இல்லையா என்பதை அப்பொழுதுள்ள சூழ்நிலையை ஒட்டி, அதுபோது கூடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் ஏற்ற முடிவை எடுக்கும் என்றாலும், சூழ்நிலையை நல்ல முறையில் உருவாக்கிப்பார்க்க முயலுவது நல்லதல்லவா என்ற முறையில்தான் பொதுச்செயலாளர் முயன்றுவருகிறார். விட்டகுறை தொட்டகுறை நட்பு, உறவு, பற்று, தொடர்பு, கொள்கை நெருக்கம் ஆகியவற்றின் காரணமாகத் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களின் இசைவைத், தேர்தலைப்பொறுத்துத், திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பார்ப்பது நல்லதுதானேயொழிய தீங்குபயப்பதல்லவே!

குழந்தைகளின் முழுநீள ஜம்பர்

குழந்தைகளின் மேல் சட்டை—இந்த உடை, ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும், ஆறுமாதம் முதல் ஒரு வயது வரை பெரும்பாலும் அணியப்படுவதாகும்.

அளவுகள் (1-வயது)



மார்புச் சுற்று அளவு 18 அங்.
முழு நீளம் 16 ,,

1-ல் இருந்து 0 வரை $16\frac{1}{4}$ அங்.
(முழு நீளம் + $\frac{1}{4}$ அங்.)

2-ல் இருந்து 0 வரை $4\frac{3}{4}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + $\frac{1}{4}$ அங்.)

3-ல் இருந்து 0 வரை $5\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + 1 அங்.)

4-ல் இருந்து 0 வரை $9\frac{1}{2}$ அங்.
($\frac{1}{2}$ மார்பளவு + $\frac{1}{2}$ அங்.)

5-ல் இருந்து 4 வரை $4\frac{1}{4}$,,

6-ல் இருந்து 2 வரை 8 அங்.

7-ல் இருந்து 6 வரை 1 அங்.
(7, 8 எண்களை இணைக்கவும்)

8-ல் இருந்து 1 வரை $9\frac{1}{2}$ அங்.

9-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$,,
(9, 1 எண்களை இணைக்கவும்)

10-ல் இருந்து 0 வரை 1 அங்.

11-ல் இருந்து 1 வரை $4\frac{3}{4}$,,
(1, 11, 9 எண்களை இணைக்கவும்)

கழுத்தின் விளக்கம்

10, 3 எண்கள் உள்ள இடத்தில் கழுத்து அமைக்கவும். கழுத்தில் சுருக்கி கட்ட உள்பக்கம், பால்சன் (துண்டு திருப்பி) செய்து கயிறு நுழைத்துக்கொள்ளவும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கீழ்ப்பக்கம் பாவாடையின் விளக்கம்

A-ல் இருந்து B வரை 30 அங்.
(30 அங். அகலத்தில் இரண்டு துண்டுகள்)

B-ல் இருந்து C வரை 19 அங்.
(முழுநீளத்தில் மேல்பாடி நீளம் குறைவு)

C-ல் இருந்து K வரை 30 அங்.

K-ல் இருந்து A வரை 19 அங்.

A, B எண்கள் உள்ள வரை மடிப்புகள் வைத்து பாடியுடன் இணைத்துத் தைக்கவும். (Λ குறி மடிப்பைக் குறிக்கும்.)

K. C எண்கள் உள்ள இடத்தில் (பாட்டம்) கீழ்ப்பக்கம் ஓரம் $\frac{1}{2}$ அங். மடித்துத் தைக்கவும். கழுத்தும் தோள்வளைவும் $\frac{1}{4}$ அங்குலம் மடித்துத் தைக்கவும்.

விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளனவாவென்று ஒத்திட்டுப்பார்த்து பிறகு வெட்டத்தொடங்கவும்.

சென்ற இதழ் விளக்கப்படத்தைப் பார்க்கவும்.

Regd. No. M 6296 256 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு சீயக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ண நாடார்
3037-38. டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம்

மலர் - 2
1953 - 54

24 இதழ்கள் கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட
வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப்படாமல் அனுப்ப ரூ. 6-12-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணு வீதம் தபாற்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்
வளர்த்த கழகம் 0—12—0
மறைந்த திராவிடம் 0—3—0

இரா. செழியன் M. A.
எழுதியவை

ராஜாதி ராஜா 0—12—0
பொது அறிவு 0—8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு:
நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.